# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 8 செவ்வாய்க்கிழமை (22-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:177


# நோர்வேயின் துணை அமைச்சருடன் சொல்ஹெய்ம் அமெரிக்கா விஜயம்!

## இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்துப் பேச

கொழும்பு,மே22

**இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் உட்பட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகப் பேச்சு நடத்துவற்காக நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமது நாட்டின் வெளிவிவகாரத் துணை அமைச்சருடன் திடீரென அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.**

நோர்வே வெளிவிவகார துணை அமைச்சர் ரேமண்ட் ஜோஹன்ஸனுடன் அமெரிக்கா சென்றுள்ள சொல்ஹெய்ம் அங்கு அமெரிக்க உள்துறைப் பிரதி அமைச்சர் றிச்சேர்ட் அமிட்டேயுடன் பேச்சு நடத்துவார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களின் இரு தரப்புப் பேச்சுக்களின் போது ஆராயப்படவுள்ள விடயங்களில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் முக்கிய இடம் வகிப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமது அமெரிக்க விஜயத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி!

கொழும்பு,மே22

வவுனியாவின் நொச்சிமோட்டையிலிருந்து வடமேற்கே சுமார் 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஆரியகுறிசுட்டகுளத்தில் நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார்; மற்றும் மூவர் காயமடைந்தனர் எனறு விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

பின்னர் அந்தப் பகுதியில் படையி

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாவனல்ல சம்பவம்: 10 பேர் கைது!

கொழும்பு,மே22

சமீபத்தில் மாவனல்லவில் முஸ்லிம்கள் மீது நடததப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக பத்துப் பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுத திணைக்களத்தின் விசேட விசாரணைக் குழுவினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கடைகளைத் தீக்கிரையாக்கியது, புத்தர் சிலை மற்றும் மசூதி ஆகியவற்றைச் சேதப்படுத்தியது ஆகிய குற்றங்கள் தொடர்பாகவே இந்தப் பத்துப் பேரும் கைதாகினர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் வரை சந்தேகநபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஓ)

## திருமலை கோட்டைக்குள் நேற்றுக் குண்டுவெடிப்பு!

### மூவர் காயம்; ஒருவர் நிலை கவலைக்கிடம்

திருகோணமலை,மே22

அதிஉயர் பாதுகாப்பு வலயமான திருகோணமலை பிரடெரிக் கோட்டைக்குள் செயற்பட்டு வரும் மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் குண்டொன்று வெடித்தது. அதில் 3பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டச் செயலகத்துடன் இணைந்த புனர்வாழ்வுத் திணைக்கள அலுவலகத்தில் ஒரு மேசைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் அலுவலக வாகனச் சாரதியான பாலித என்பவரின் ஒரு கை துண்டிக்கப்பட்டதாகவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு அரசுத்தரப்பு இணங்கும்?

## சட்டவல்லுநர்களுடன் ஜனாதிபதி ஆராய்வு

கொழும்பு,மே22

நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்குவதற்காக, விடுதலைப் புலிகள் மீதான தடையை தற்காலிகமாக விலக்க அரசு முன்வரக்கூடும் என்று அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிததுள்ளார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தற்காலிகத் தடைநீக்கம் குறித்து சட்டவல்லுநர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை நடத்தி வருவதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அரசாங்கம் 17 வருடகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அக்கறை காட்டுவது போல் தோன்றும் சமயத்தில் விடுதலைப் புலிகள் தம்மை சட்டபூர்வமான ஓர் அமைப்பாக்கும்படி கோரியிருப்பதாக அந்தச் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் -

ஊடகத்துறைப் பணிப்பாளர் ஆரியரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில் -"இந்தச் சூழ்நிலையில் நல்லது நடக்கக்கூடும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்" - என்றார். (உ-ஓ)

## தமிழ் அதிகாரிகளுக்கு நேர்ந்த கதி!

யாழ்ப்பாணம்,மே22

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த மத்திய-மாகாண அரசுகளின் அதிகாரிகள் தமது பயண ஏற்பாடுகள் விடயத்திலும் பெரும்பான்மை, சிறுபான்மை இனப்பாகுபாடும், பக்கச்சார்புப் போக்கும் கடைப்பிடிக்கப்பட்டதாகக் கூறி தங்களுககுள் பொருமிக் கொண்டனா.

இந்த நிகழ்வில் பங்குபற்ற வந்த பெரும்பான்மை இன அதிகாரிகள் அனைவரும் - ஓரிருவரைத் தவிர - நேற்றே விசேட விமான சேவையில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் செல்வதற்கு வசதி வழங்கப்பட்டது. ஓரிரு தமிழ் அதிகாரிகளும் அவர்களுடன் தொற்றிக் கொண்டனர்.

ஆனால் சிறுபான்மை இன அதிகாரிகளுககு அந்த வசதி அளிக்கப்படவில்லை; கைவிரிக்கப்பட்டது; அவர்கள் ஏமாந்துபோயினர்.

இன்று விமான சேவையில் அல்லது பயணிகள் கப்பல் மூலம் அவர்களை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# பயணிகள் விமானசேவை நேற்றும் இன்றும் இல்லை

## நாளை முதல் வழமைபோல்

யாழ்ப்பாணம்,மே22

பலாலி - இரத்மலானை பயணிகள் விமான சேவை இன்றும் இடம் பெறமாட்டாது என்று விமானப்படையின் 'ஹெலிருர்ஸ்' நிறுவன யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

விமானச்சேவை நேற்றும் இன்றும் இடம்பெறமாட்டாது என்று அந்த நிறுவனத்தின் கொழும்பு அலுவலகம் சில தினங்களுக்கு முன்னரே அறிவித்திருந்த போதும் -

இந்தச் சேவை இடை நிறுத்தப்படுவது குறித்து எந்த அறிவித்தலையும் அதன் யாழ்.அலுவலகம் பொதுமககளுக்கு வெளியிடவில்லை.

அத்துடன் நேற்றுப்பயணம் மேற்கொள்வதற்கான பயணச்சீட்டுக்களையும் பொதுமக்களுக்கு யாழ்.அலுவலகம் வழங்கியிருந்தது.

பயணச்சீட்டு பெற்றவர்கள் நேற்றுக் காலை பயண ஏற்பாடுகளுடன் யாழ்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸின் கடும் எதிர்ப்பை அடுத்து

# உள்ளூராட்சித் தேர்தல் முறையை மாற்றும் திட்டத்தை அரசு கைவிட்டது

கொழும்பு,மே22

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கடும் எதிர்ப்பை அடுத்து -

உள்ளூராட்சித் தேர்தல் முறையை மாற்றும் திட்டத்தை அரசு கைவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கு விகிதாசார முறைப்படி உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் தற்போதைய முறையை மாற்றி - பழைய - வட்டார அடிப்படையில் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் முறையை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இது தொடர்பான சட்ட மூலம் ஒன்றை அரசு இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் உத்தேசித்திருந்தது.

இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கடும் எதிர்ப்பை அரசிடம் தெரிவித்து வந்தது.

இதை அடுத்துத் தேர்தல் முறையை மாற்றும் நடவடிக்கையைக் கைவிடுவது என்று அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## ஆணைக்குழு நியமனம்

கொழும்பு,மே22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான அமரர் எம்.எச்.எம். அஷ்ரப் ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து ஆராய்வதற்காக தனிநபர் ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நேற்று நியமித்துள்ளார்.

அந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.எம்.ஜி. வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

அஷ்ரப்பின் துணைவியாரும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப்பின் கோரிக்கையின் பேரில் இந்தக் குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் புதிய தாவரம் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம்,மே22

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கட்டுப்படுத்த முடியாமல் பரவி வரும் நச்சுக்களையான பாதீனியத்தை அழித்தொழிக்க மாற்றுத் தாவரம் ஒன்று இனங்காணப்பட்டிருக்கிறது.

'எலியோற்றிஸ்' எனப்படும் இந்தக் களை காணப்படும் இடங்களில் பாதீனியம் களையின் பெருக்கம் கட்டுப்பாட்டில் இருப்பதும் கண்டறியப்பட்டிருக்கிறது.

அவரைக் குடும்பத்தைச் சேர்ந்த தாவரமான 'எலியோற்றிஸ்' குடாநாட்டில் போதியளவு காணப்படாவிடினும் அதுவே பாதீனியத்தை ஒழிப்பதற்கு மிகவும் அனுகூலமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

தறசமயம் மிக அரிதாகக் காணப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆய்வுகூடத்தில் சூடேற்றிய சமயம்

# அமில சோதனைக் குழாய் வெடித்து 5 மாணவியர் காயம்

## வேம்படி மகளிர் கல்லூரியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே22

இரசாயன ஆய்வு கூடத்தில் அமிலத் திரவம் நிரப்பப்பட்ட பரிசோதனைக் குழாயை வெப்பம் ஏற்றிய வேளை அது வெடித்துச் சிதறியதில ஐந்து மாணவிகள் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல்1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கந்தகவீரொட்சைட்டைத் தயாரிப்பதற்காக சல்பூரிக் அமிலம் நிரப்பப்பட்ட பரிசோதனைக் குழாயை வெபப மேற்றிய வேளையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாதாரணமாக இத்தகைய சோதனைகளுக்கு கோதி குழாயே பயன்படுத்தப்படவேண்டும் என்றும் -

அந்தக் குழாய் இல்லாததால் பரிசோதனைக் குழாயைப் பயன்படுத்தியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாணவிகளுக்கு உடற்பாகம், முகம் ஆகிய இடங்களிலேயே காயம் ஏற்பட்டுள்ளது.

(உ-3-9-10)

### உள்துறை அமைச்சர் ஜாக்ஸ்ரோ அறிவிப்பு

# அகதிகளின் தொகையைக் கட்டுப்படுத்த பிரிட்டன் அரசு நடவடிக்கை எடுக்கும்

## எதிர்க்கட்சியின் தேர்தல் பிரசாரத்தால் நிர்ப்பந்தம்

லண்டன்,மே22

அகதிகளின் தொகையைக் கட்டுப்படுத்த பிரிட்டன் பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் ஜாக்ஸ்ரோ கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்திருக்கிறார்.

எதிர்வரும் ஜூன் 7 இல் இடம் பெறவிருக்கும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிங் கட்சியினர் தமது பிரதான தொனிப் பொருளாக அகதிகள் பிரசச்னையைப் பிரஸ்தாபித்துவருவதால் ஆழும் தொழிற் கட்சி அகதிகள் தொடர்பாக துரிதமாகவும், கடுமையானதுமான நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

பல ஆயிரக்கணக்கான அகதிகளுக்குப் புகலிடம் கொடுப்பதைப் பிரிட்டன் மட்டுப்படுத்தும் என்று ஒப்சேவர் பத்திரிகைக்கு அளித்திருக்கும் பேட்டியில் குறிப்பிட்ட உள்துறை அமைச்சர் ஜாக்ஸ்ரோ ஆயினும் உணமையான அகதிகளை ஏற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆயினும் அகதிகள் தொகை எவ்வளவு எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப்படுமென்பதைக் கூற ஸ்ரோ மறுத்துவிட்டார்.

ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் இந்த விடயமாக இணக்கம் காணப்பட்ட தொகையினரே உள்வாங்கப்படுவார்கள் என்று ஸ்ரோ குறிப்பிட்டிருக்கிறார்.

நாடு எவ்வளவு தொகையினரை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதிலேயும் சமூகமட்டத்திலான அங்கீகாரத்திலேயுமே அகதிகள் தொகை தங்கியிருக்கின்றது. ஐரோப்பிய மற்றும் சர்வதேச ரீதியான இணக்கப்பாடுகளுக்கமைய அகதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுமென்றும் அவர் கூறியிருக்கின்றார்.

76 ஆயிரம் பேர் பிரிட்டனில் புகலிடம் கோரியிருப்பதாகவும் 20 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு புகலிடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் உள்துறை அமைச்சுப் புள்ளிவிவரங்கள் மூலம் அறிய வருகின்றது.

ஆனால் உண்மையில் ஒரு லட்சத்து 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் புகலிடம் கோரியுள்ளனர். உள்துறை அமைச்சின் புள்ளிவிவரங்களில் விண்ணப்பதாரிகளின் மனைவிமார், குழந்தைகள், தங்கியிருப்போர் உள்ளடக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, துருக்கி, ஆப்கானிஸ்தான, சோமலியா, ஈராக் ஆகிய நாடுகளிலிருந்தே பெருமளவு அகதிகள் பிரிட்டனில் தஞ்சம் கோரியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சி அகதிகளுக்கு எதிரான கொள்கையாக ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் இராஜதந்திர ரீதியான சச்சரவுக்கு வழி வகுத்துள்ளது.

பாதுகாப்பான நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குள் வரும் அகதிகள் யாவரும் அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் வில்லியம் ஹெக் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தார். அவர் பாதுகாப்பான நாடு என்று குறிப்பிட்டது பிரான்ஸையா என்று கருதப்படுகிறது. சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் பிரிட்டனுக்குள் நுழைவதற்கு முன்னர் பிரான்ஸ"க்குள் சென்றே அங்கிருந்து பிரிட்டனுக்குப் பயணம் செய்வதாக கொன்சர்வேட்டிவ் கட்சியின் அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பிரிட்டனின் நிழல் உள்துறை அமைச்சரான **(Shadow Home Secretary)** திருமதி ஆன் வைட் கோம்வே இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் பிரான்ஸில் இருந்து அகதிகள் பிரிட்டனுக்குள் வருகிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்ட பின் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் அந்த நாடு இந்த அகதிகளைத் தான் திருப்பி அழைக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்த விடயத்தில் பிரஞ்சு அரசாங்கம் கண் மூடி மௌனமாக இருப்பதாகவும் அவர் சாடியுள்ளார். பல நூற்றுக்கணககான அகதிகள் பிரிட்டனுக்குள் நுழைவதற்காக பிரான்ஸில் காத்திருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டனில் விசேடமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தடுப்பு நிலையங்களிலும் புகலிடம் கோருவோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், கொன்சர்வேட்டிவ் கட்சியினரின் திட்டப்படி இவர்கள் சகலரினதும் மனுக்களும் நிராகரிக்கப்பட்டால் அது அகதிகள் தொடர்பான ஐ.நா.சாசனத்தை மீறும் செயல் என்று ஐ.நா.அகதிகளுக்கான ஆணையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை அகதிகளுக்கான கவுன்ஸிலும் கொன்சர்வேட்டிவ் கட்சியினரின் திட்டத்தை மனிதாபிமானமற்றது என்று சாடியுள்ளது.

இதனிடையில், கொன்சர்வேட்டிவ் கட்சியினர் அகதிகள் பிரச்சினையைத் தேர்தல் தொனிப்பொருளாக மாற்றியுள்ளதை பிரதமர் றொனிப் பிளயர் கடுமையாகச் சாடியுள்ளர்.


### கண்ணீர் அஞ்சலி

எமது நிர்வாக சபை உறுப்பினர்
**செ.இராஜேஸ்வரன்**
அவர்களின் தாயார்
**திருமதி செல்லத்துரை சின்னத்தங்கச்சி**

காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
*வண்.வட மேற்கு,* *ஸ்ரீ கண்ணகி அம்பாள் தேவஸ்தான*
*ஆனைக்கோட்டை.* *இந்து இளைஞர் மன்றம்.* (C/16803



### அரசசேவையிலுள்ள கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம்

மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து எமது கோரிக்கைகளை முன்வைக்க இருப்பதால் அரச சேவையில் கடமையாற்றும் கீழ் உழைப்புப் பட்டதாரிகள் எமது சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

*போசகராக* – திரு.இ.தவராஜா, வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்.
*தலைவராக* – திரு.இ.க.இராஜேஸ்வரன், யாழ்ப்பாணம் மாநகரசபை.
*செயலாளராக* – திரு.கு.பற்குணராசா
ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

செயலாளர், 365, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சனி/ஞாயிறு காலை (9 – 12) இற்கு இடையில் சந்திக்கலாம்.)

(C/16802) – செயலாளர்.



### 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
15 - 07 - 1944

ஆண்டவன் அடியில்
23 - 04 - 2001

அமரர்
**செல்லையா தங்கராசா (மாயவர்)**

எங்கள் அன்பு அப்பாவே!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தாலென்ன?
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தாலென்ன?
ஆறுதல்கூற இறைவன் வந்தாலென்ன?
அப்பா! உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது
*நீங்கள் என்றைக்கும் வழிகாட்டியாய் இருந்து வழிகாட்டிச் செல்லவும் ஆத்மா சாந்தி பெறவும் இறைவனை வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*ஒற்றுமையாய்க் கூடி வாழ்ந்திடத்தான் புத்தாண்டு பிறந்தது. ஆனால் இறைவா எங்களுக்கோ அன்புள்ள அப்பாவைக் கொண்டு செல்லவா வந்தது இப்புத்தாண்டு?*

எனது அன்புக் கணவரின் (23.04.2001) மறைவுச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (23.05.2001) புதன்கிழமை எமது வீட்டில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*விளையாட்டு அரங்கு வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(88062)


### கடனுதவி

தென்மராட்சி,மே22

வரணி இடைக்குறிச்சி மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த ஒன்பது அங்கத்தவர்களுக்கு விவசாயக் கடனாக 90 ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினால் விவசாயத்தில் ஈடுபடும் பெண்களுக்கு வழங்கவென சுழற்சி முறைக்கடனாக இந்நிதி வழங்கப்பட்டதாக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராசசேகரம் தெரிவித்தார். (உ-117)

### இலங்கைக்கும் ஆபத்து!

கொழும்பு,மே2

தமிழகத்தின் தென்பகுதியி உள்ள கூடங்குளத்தில் உருவா கப்படும் அணு உலையினால் இல கைக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு கள் உண்டு என்று அச்சம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் மெகா வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்படும் இந்த மின் உலையில் தவறுகள் ஏற்படும் சமயத்தில் அது இலங்கையில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தும் என றும் -

தீவிரவாதிகளின் தாக்குதலோ அல்லது இயற்கை அனர்த்தங்களோ இடம்பெறும் பட்சத்தில் அணு உலை சேதமடைந்து, அதிலிருந்து வெளி யாகும் கதிரியக்கம் இலங்கையைத் தாக்கி அழிவை ஏற்படுத்தும் என்றும்-

சுற்றுச் சூழல் ஆர்வலரான ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார். (உ-ஒ-4)

### காணாமற்போனோர் தொடர்பாக

## மீள் விசாரணைக்கு 70 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே22

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முதலாவது கட்டமாக விசாரணை செய்த 155 பேரில் 70 பேர் தொடர்பாக மீளவும் விசாரணை செய்யப்படவுள்ளது.

முதற் கட்டமாக விசாரணை செய்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு திரும்பியுள்ளனர். மீள் விசாரணை செய்வதற்காக மற்றொரு குழுவினர் யாழ்.வந்துள்ளனர்.

ஆரம்பத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய பொலீஸ் நிலையங்களில் நடைபெற்றன. தற்போது விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களை யாழ்.பொலீஸ் நிலையத்துக்கே சமுகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்த விசாரணை நடவடிக்கைகளுக்கு காணாமற்போனோர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் சிரமங்களைக் கருத்தில எடுக்காது பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களின் பெயர் விவரமும் காணாமற்போனோர் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களின் பெயர் விவரமும் மீள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களும் முறையே வருமாறு:

- மாதன் ஜெகதீஸ்வரன் (கோவை இல.பி.96 - 890,கைதடி, யாழ்ப்பாணம்) மாதன் மீனாட்சி, இராசமூர்த்தி ஜெயலலிதா.
- சீனியர் தர்மலிங்கம் (கோவை இல.பி 80 - கந்தரோடை, சுன்னாகம்) மகாரத்தினம் சாந்தநாயகி, தவராஜா.
- கந்தவன் சிவராசா (கோவை இல.பி 100 - மடத்தடி, சாவகச்சேரி) சிவராசா இராசநாயகி (ஜெயந்தி வாசம், இமையாணன், உடுப்பிட்டி) சரஸ்வதி, அந்தப்பிரிவு கிராம சேவகர்.
- கந்தையா புஸ்பராசா (கோவை இல.பி.97- கோகிலாக்கண்டி, கைதடி) மேரி கமலா (கேரதீவு வீதி, நாவற்குழி கைதடி) க.விக்னேஸ்வரராஜா (ஜே-296 கிராமசேவகர்)
- பரமநாதன் நடேஸ்வரன் (கோவை இல.பி. - கேரதீவு வீதி, கோகிலாக்கண்டி, கைதடி) பரமநாதன் பூரணம் (வட்டு. வடக்கு - கலைநகர், சித்தன்கேணி) க.விக்னேஸ்வரராஜா (ஜே-296 கிரமசேவகர்)
- கணேசலிங்கம் கிருபாகரன் (கோவை இல.பி.66 - நாவற்குழி தெற்கு, கைதடி) செல்லத்துரை கணேசலிங்கம் (6,வேலணைத்துறை, வேலணை)
- தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி (கோவை இல.பி.91 - 250, அராலி வீதி, சங்கானை) கோவிந்தசாமி தனலட்சுமி, சிவசுப்பிரமணியம் சுரேந்திரன், தம்பிப்பிள்ளை சிவசுப்பிரமணியம், கமலா
- சின்னத்தம்பி கோபலகிருஸ்ணன் (கோவை. இல.பி.77 - கைதடி தெற்கு, நாவற்குழி) சங்கரன் சின்னாச்சி, சிவபாதம் செல்வராணி, பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற பொலீஸார்)
- பூபாலசிங்கம் ஜெயலலிதா (கோவை.இல.பி.75 - மறவன்புலோ, சாவகச்சேரி), சரஸ்வதி பூபாலசிங்கம், சபாநாதன் (ஜே-297, ஜே-298 கிராம சேவகர்)
- திருநாவுக்கரசு சுதாகரன் (கோவை இல.பி.86 - மறவன்புலோ, சாவகச்சேரி), சபாநாதன் (ஜே 297, ஜே-298 கிராமசேவகர்)

ஏனையோரின் பெயர்கள் பின்னர் வெளியிடப்படும். (ஐ-6)


### கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர்
**திரு.ஆ.சுப்பிரமணியம** அவர்களின் தந்தையார்
**திரு.வேலுப்பிள்ளை ஆறுமுகம்**

அவர்கள் 19.05.20001 சனிக்கிழமை அன்று காலமானார். அவருக்கு எமது அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அவரது பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், விரிவுரையாளர்கள், முகாமைத்துவத்துறை,
(88084) யாழ்.பல்கலைக்கழகம்.



### நூல் வெளியீட்டு நிகழ்வு

**நூல்** :"யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம"
**நூலாசிரியர்:** கலாநிதி **S.T.B.**இராஜேஸ்வரன்
**காலம்** : நாளை (23.05.2001) புதன் மாலை 3.00மணி
**இடம்** : நூலக கேட்போர் கூடம், யா/பல்கலைக்கழகம்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வெளியீடு: **GEOGRAPHICAL SOCIETY**
**Department of Geography,**
**University of Jaffna.**

(88083)

## ★ கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# இடம்பெயர்ந்த 61 ஆயிரம் குடும்பங்களில்

# 27 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணம்

### அரச அதிபர்கள் வெளியிடும் அதிர்ச்சித் தகவல்கள்

யாழ்ப்பாணம், மே 22

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 61 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியுள்ளபோதிலும் 27 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற குறைநிவர்த்தி சேவையில் கலந்துகொண்ட இரு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை எமது செய்தியாளர் சந்தித்து உரையாடிய போதே அவர்கள் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஏ. ஐயாத்துரை தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் பூநகரி, கிளிநொச்சி நகரப் பகுதி போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த 27 ஆயிரம் குடும்பங்கள் தங்கியுள்ளன.

இவர்களில் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது. அந்தப் பத்தாயிரம் பேருக்கும் உரிய உலர் உணவுப் பொருள்கள் அனைத்தும் 27 ஆயிரம் குடும்பங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இதனால் அரைகுறை நிவாரணமே இங்குள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கே கிட்டுகின்றது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள 16 ஆயிரம் குடும்பங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ள 52 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 480 குடும்பங்கள் உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளினால் கடுமையாகப்பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்தக் கொடுப்பனவை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 600 பேரின் விண்ணப்பங்கள் எமது செயலகத்தில் கிடப்பில் கிடக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மூன்று போக நெல்-3 ஆயிரம் மெ. தொன்— விற்பனை செய்ய முடியாமல் தேங்கிக் கிடக்கிறது.

சந்தை வாய்ப்பு இல்லாமல் இத்தகைய உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளது- என்றும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சுந்தரம் இதுதொடர்பாகக்கூறியதாவது:-

யாழ்ப்பாணம், திருகோணமலை, கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த — இடம்பெயர்ந்த— 34 ஆயிரம் குடும்பங்கள் முல்லைத்தீவில் தங்கியுள்ளன

இதில் 13 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது.

இடம் பெயர்ந்தவர்களுக்காக 64 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 666 குடிசைகளில் இடம் பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களுக்கு இதுவரை கணனிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

கடும் பாதிப்படைந்தவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் 1999 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

பெற்றோல் மருந்துக்குக்கூட பெறமுடியாதுள்ளது. மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 100 ரூபா வீதம் இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

நபர் ஒருவருக்கு ஒரு மாதத்துக்கு ஒரு லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

சைக்கிள் ரயர், ரியூப் மற்றும் உதிரிப்பாகங்கள் தற்பொழுது தாராளமாக முல்லைத்தீவுக்கு கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது— என்றும் அவர் கூறினார்.

(உ-5)

---

# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின்

# வன்னி ஊழியருக்கு வேதனம் தரப்படவில்லை

### தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் பணிபுரிந்த — வன்னியில் வசிக்கின்ற — 59 ஊழியர்களுக்கும் 2000 ஆம் ஆண்டுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்படவில்லை.

இலங்கை வர்த்தக, கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (சி. எம். யூ.) பரந்தன் தொழிற்சாலை தொழில் நுட்பக் கிளை மற்றும் தொழிற்சாலைக் கிளை ஆகியவற்றின் செயலாளர்கள் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மக்கள் குறை நிவர்த்தி சேவையில் ஐம்பது வீத சம்பளத்தைப் பெற பரந்தன் ஊழியர்கள் மறுப்பு; காசோலைகளைத் திருப்பி அனுப்ப முடிவு" — என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்து நேற்று அவர்கள் அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைச் சேர்ந்த 142 ஊழியர்களில் 55 பேர் குடாநாட்டிலும் 59 பேர் வன்னியிலும். (அதாவது பரந்தன் தொழிற்சாலை அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்திலும்) ஏனைய 28 பேர் வவுனியா, மன்னார், கொழும்பு போன்ற பிரதேசங்களிலும் வசிக்கின்றனர்.

1 ஜனவரி 2000 இலிருந்து 31 டிசம்பர் 2000 வரையான காலப் பகுதிக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் 15 ஜனவரி 2001 அளவில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வசிக்கும் கம்பனியின் ஊழியர்களுக்கும் அதைத் தொடர்ந்து கொழும்பு, வவுனியா, மன்னார் போன்ற பிரதேசத்தில் வசிக்கும் கம்பனியின் ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டன.

அதே வேளையில் இன்று வரையும் வன்னிப் பிரதேசத்தில் வசிக்கும் ஊழியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக எமது சங்கம் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கும், அமைச்சருக்கும், கம்பனியின் தலைவருக்கும் பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

எனவே யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ள ஊழியர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்திலுள்ள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கி 4 மாதமாகியும் வன்னியிலுள்ள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாததையிட்டு மிகுந்த மனவேதனை கொண்டிருந்த சமயத்தில், கம்பனியின் தலைவர் பொ. தியாகராசா தொழிற்சாலை ஊழியர்களின் 2001 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரையான சம்பளக் கொடுப்பனவு 15-05-2001 இல் வழங்கப்படும் என உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தார். அதன்படி சம்பளத்தைப் பெறச் சென்ற ஊழியர்கள் அங்கு சென்ற பின்புதான் 50 வீத சம்பளம் வழங்கப்படவுள்ளதாக அறிந்தார்கள். ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த சம்பளம், கொழும்பு தலைமைக் காரியாலய ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் 50 வீதமாகும். எனவே அதன் அரைப்பங்கு வழங்கப்படுமாயின் அது உண்மையில் 25 வீதச் சம்பளமாகவே அமையும்.

அத்துடன் எந்தவொரு நிறுவனத்தின் ஊழியர்களின் சம்பளத்தையும் தொழில் ஆணையாளரின் முன் அனுமதி பெறாமல் குறைப்பது சட்டவிரோதமானது. எனவே பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களின் 50 வீத சம்பள வழங்கல் தொடர்பாக கம்பனியின் தலைவர் ஒரு தலைப்பட்சமான முடிவை எடுத்து நடைமுறைப்படுத்தினார் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

மொத்தம் 142 ஊழியர்களில் யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ள ஊழியர்களுக்கே 2000 ஆம் ஆண்டுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டதுடன் 2001 ஆம் ஆண்டு தை — சித்திரை சம்பளத்தின் 50 வீத சம்பளத்துக்குரிய காசோலைகளே எடுத்துவரப்பட்டன. அத்தோடு வன்னியிலுள்ள 59 ஊழியர்களுக்கு 2000 ஆம் ஆண்டுக்குரிய சம்பளம் வழங்கப்படவேயில்லை — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

## புலமைப் பரிசில் மாணவர்கள் தெரிவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 22

ஜனாதிபதியின் விசேட புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

ஜீ.சி.ஈ. உயர்தர முதலாம் வருடம் மற்றும் தரம் 6, 7, 8, ஆகிய வகுப்புக்களில் இருந்தே புலமைப் பரிசில் திட்டத்துக்கென மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்

(க-10)

## பண்டத்தரிப்பில் அலுவலகம் திறப்பு

சண்டிலிப்பாய், மே 22

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் அரசாங்க குடும்ப சுகாதார சேவை அலுவலரின் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

(க-1.3.5)

## சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, மே 22

சுன்னாகம் சக்தி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணி தொடக்கம் எட்டு மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

இம் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும்.

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறும். (க-152)

★ ★ ★

பண்ணாகம் விசுவத்துறை வைரவ சுவாமி பொங்கல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறும்.

(க-28)

★ ★ ★

சுழிபுரம் - பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வருடாந்த கொடியேற்ற உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க-28)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, மே 22

சுந்தரோடை அருளானந்த விநாயகர் திருக்கோவில் மஹோற்சவ விழா எதிர்வரும் சனிக்கிழமை பகல் பதினொரு மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி மாலை-சப்பறத் திருவிழாவும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் இரதோற்சவமும் நடைபெறும். மறுநாள் பகல் தீர்த்தோற்சவமும் 7 ஆம் திகதி மாலை பூங்காவனமும் இடம்பெறும். (க-152)

★ ★ ★

கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய வருடாந்த நவநாள் திருப்பலி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி நற்கருணை ஆராதனை 31 ஆம் திகதி பெருவிழா திருப்பலி திருச்சொருப பவனி நடைபெற்று ஆசிருடன் உற்சவம் முடிவடையும். (க)

★ ★ ★

அச்சுவேலி பத்தமேனி அருள்மிகு தீர்த்தாங்குளம் பிள்ளையார் தேவஸ்தான தீர்த்தோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.40 மணியளவில் நடைபெறவுள்ளது. (க-6)

## காணாமற்போன இளைஞர் ஈ. பி. டி. பியில்!

பளைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நெல்லியடியில் வசித்து வந்தபோது காணாமற் போனதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் ஈ.பி.டி.பியில் இணைந்து விட்டதாக அவரின் உறவினர் அனைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தங்கராசா ததீசன் (வயது 19) என்பவரே இவ்வாறு இணைந்தவராவார். இவரை மீட்டுத் தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் இளைஞரின் தாயார் கோரினார்.

(உ-10)

## பல்கலைக்கழக கிளிநொச்சி மாணவருக்கு!

யாழ்ப்பாணம், மே 22

யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மேற்படி மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து, தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இ. ஐயாத்துரையுடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது

இதற்காக கிளிநொச்சி மாவட்ட அனைத்து மாணவர்களையும், இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம் 2 இல் கூடுமாறு ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

(ஒ)

### சித்திரவதைக்கு ஆளாகக் கூடியவர்கள் எனக் கருதப்படும்

# பயங்கரவாதச் சந்தேக நபர்களை நாடு கடத்தத்தான் வேண்டுமா?

## கனடா உயர் நீதிமன்றம் பரிசீலனை

ஒட்டாவா, மே 22

சொந்த நாட்டில் சித்திரவதை செய்யப்படலாம் என்று அச்சமடையும் நபர்கள். பயங்கரவாத சந்தேக நபர்கள் என்று சந்தேகிக்கப்பட்டாலும் அவர்களை நாடு கடத்தத்தான் வேண்டுமா என்ற கேள்வி குறித்து கனடாவின் உயர் நீதிமன்றம் இந்தவாரம் பரிசீலனை செய்யவிருக்கிறது.

வெளிநாடுகளில் அநேகமாகப் பயங்கரவாதம்குறித்து மென்போக்கைக்கடைப்பிடிப்பதாகக் கருதப்படும் கனடா அரசாங்கம், நாடு கடத்தல் சம்பந்தமாக குடிவரவு சட்டத்தின் கீழ் மக்களுக்கு வாழ்க்கை உரிமையையும், சுதந்திரத்தையும் மறுக்கும் வாதங்களை நிராகரிக்குமாறு உயர்நீதிமன்றத்திடம் கோரியுள்ளது.

கனடாவில் அரசியல் புகலிடம் கோரியுள்ள இலங்கையரான மாணிக்க வாசகம் சுரேஷ், ஈரானைச் சேர்ந்த மன்சூர் அஹ்லானி ஆகிய இருவர் சம்பந்தமாகவுமே கனடா அரசாங்கம் இப்பொழுது உயர் நீதிமன்றத்திடம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த இருவரும் தங்கள் சொந்தநாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் தாங்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவோம் என்று அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த வருடம் இந்த இருவருக்கும் எதிராக கீழ் நீதிமன்ற நீதியரசர் ஜோசப் ரொபர்ட்சன் வழங்கிய தீர்ப்பில் உலகில் எந்தவொரு நாட்டிலும் பார்க்க சர்வதேச பயங்கரவாதக் குழுக்களுக்கு கனடாவிலேயே இடமளிக்கப்பட்டுள்ளது என்று அளிக்கப்பட்ட சாட்சியத்தை எடுத்துக் காட்டியிருந்தார்.

இரண்டாயிரமாம் ஆண்டு ஜனவரி மாதம் நீதியரசர் ரொபர்ட்சன் வழங்கிய தீர்ப்பில் சர்வதேசச் சட்டத்தின் கீழ் சித்திரவதைக்கு எதிரான பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியிருந்தார்

ஏற்கனவே பயங்கரவாதிகளுக்குக் கனடா ஒரு புகலிடம் அல்ல என்று கூறப்படுவதை உறுதிப்படுத்த அந்நாட்டு அரசாங்கத்துக்குச் சட்டபூர்வ உரிமை உண்டு என்றும் நீதியரசர் குறிப்பிட்டிருந்தார்.

கனடாவின் குடிவரவுச் சட்டம் அந்நாட்டின் 1981 ஆம் ஆண்டின் உரிமைகள், சுதந்திரம் சாசனத்தை மீறுகின்றது என்ற அகதிகளின் வழக்கறிஞர்களது கோரிக்கையை உயர் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை ஆராயவிருக்கின்றது

சுரேஷ் மாணிக்கவாசகம் உலகத் தமிழர் இயக்கத்துக்கு நிதி சேகரித்து வந்தவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த உலகத் தமிழர் இயக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகச் செயற்பட்டு வரும் ஓர் அமைப்பு என்று கனடிய பாதுகாப்பு உளவுச் சேவை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(க)

### பாடநூல்களை அச்சிடுவதற்கான

# உலகவங்கியின் நிதி உதவி இந்த ஆண்டு கிடைக்காது?

கொழும்பு, மே 22

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் திட்டத்திற்கு உலக வங்கி வழங்கி வந்த பதின்மூன்றரைக்கோடி ரூபா நிதி உதவியை இவ்வாண்டு அது நிறுத்தி வைக்கும் நிலைமை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாட நூல்கள் அச்சிடப்படும்போது மிகவும் உயர்ந்த தரத்தில் அவற்றை அச்சிடுவதற்காக அரசு ஒதுக்கும் நிதிக்கு மேலதிகமாக உலக வங்கி பதின்மூன்றரைக்கோடி ரூபாவை ஆண்டு தோறும் உதவியாக வழங்கிவந்தது.

இந்த நிதிஉதவியை வழங்குவதற்கான தகுதியைப்பெறுவதற்கு கேள்விப்பத்திர முறை உரிய முறையில் பின்பற்றப்பட வேண்டும் என்பது உலக வங்கியின் ஒரு நிபந்தனையாகும்.

ஆனால் இந்த ஆண்டுகல்வி அமைச்சு கேள்விப் பத்திர முறைகளை அனுசரிக்காது பாடநூல்களை அச்சிடுவது எனத் தீர்மானித்துள்ளதால் உலக வங்கியின் உதவிகிடைக்காமல் போகும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த வருடமும் கல்வி அமைச்சு கேள்விபத்திர முறைகளை அனுசரிக்காது பாட நூல்களை அச்சிட்ட காரணத்தினால் உலக வங்கி நிதியில் அரைவாசி நிதியே கல்வி அமைச்சுக்குக் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

### மட்டுவில் தெற்கு, கைதடி, நுணாவிலில்

# மக்களின் ஒன்றுபட்ட செயலால் திருட்டுக்கள் முறியடிப்பு!

### தற்போது சரசாலை, கல்வயலில்லை கைவரிசை

யாழ்ப்பாணம், மே 22

மட்டுவில் தெற்கு, கைதடி, நுணாவில் பகுதிகளில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இடம் பெற்று வந்த திருட்டுக்கள் இப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து எடுத்த நடவடிக்கைகளினால் நிறுத்தப்பட்டு விட்டதாக மட்டுவில்மத்தி கிராம அலுவலர் தெரிவித்தார்.

நீர்வேலித் தரவை ஊடாக செல்பவர்கள் மட்டுவில் தெற்குப் பகுதியிலுள்ள வீட்டுப் பொருள்களைத் திருடி வந்தார்கள்.

இத் திருட்டுக்களைத் தடுக்கும் பொருட்டு இப்பகுதி மக்கள் தினமும் நீர்வேலித் தரவையில் காத்திருந்து திருட்டுக்களைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் திருட்டுகள் முறியடிக்கப்பட்டு விட்டன.

தற்பொழுது புத்தூர் வீரவாணி, வாதரவத்தை ஊடாக சரசாலை, மட்டுவில் வடக்கு, கல்வயல் போன்ற இடங்களுக்குச் செல்லும் திருடர்கள் அங்கிருந்து வீட்டுக் கதவுகள், ஜன்னல்கள் உட்பட பெறுமதியான பொருள்களை அபகரித்து வருகின்றனர்.

இவ்வாறு திருடப்பட்ட 14 சோடி கதவுகள் புத்தூரில் வீடொன்றில் இருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு அப்பகுதி கிராம அலுவலர் எஸ். இராசதுரை தென்மராட்சி மக்களுடன் சென்ற போது கதவுகள் இடம் மாற்றப்பட்டன.

மட்டுவில் பகுதி மக்களைப் போன்று சரசாலை, கல்வயல் பகுதி மக்களும் விழிப்புக்குழு அமைத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டால் திருட்டுக்களைத் தடுக்க முடியும் என்று மட்டுவில் மத்தி கிராம அலுவலர் க. வாமதேவன் கூறினார்.

( க - 5 )

# கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் வடக்கு

அண்ணமார் ஆலயத்தின் ஆரம்பகால நிர்வாக உறுப்பினராக இருந்துவரும்

திரு. பொ. கருணாகரன் அவர்களின்

பாசமிகு புதல்வி

## செல்வி சர்மிலி

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய அண்ணமாரை இறைஞ்சி நிற்கின்றோம்.

– ஆலய பரிபாலன சபையினர்

(88061)

# பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் மதிய உணவுத்திட்டம்

### அடுத்த மாதத்தில் பரீட்சார்த்தம்

கொழும்பு, மே 22

பரீட்சார்த்த அடிப்படையில் பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் ஒன்று கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இதற்காக 120 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. முதல் கட்டமாக முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கப்படவிருக்கிறது.

இத்திட்டம் அடுத்த மாதம் ராஜகிரியவில் உள்ள ஹேவாவிதாரண மகா வித்தியாலயத்தில் இருந்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

பரீட்சார்த்த அடிப்படையில் வழங்கப்படவுள்ள போசாக்குள்ள மதிய உணவாக முட்டை, பருப்பு, பயறு, மரக்கறி, சோறு என்பவற்றுடன் பழங்களும் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு திட்ட அமுலாக்கல் சமுர்த்தி விவகார அமைச்சுக்களின் உதவியை பெற்றுக்கொள்ள கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் போசாக்கின்மைக்கு முடிவு கட்டும் வகையில் இவ்வாறு போசாக்குணவுத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

பரீட்சார்த்த திட்டம் வெற்றியளிக்குமாயின் விரைவில் திட்டம் நாடளாவிய ரீதியில் எல்லாப் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவிருப்பதாக அறிய முடிகிறது.

(க)

### 'பிஸ்கட்' பைக்கற்றில் திகதியை மாற்றி

# சமூகவிரோதச் செயலில் ஈடுபட்ட வர்த்தகருக்கு அபராதம்!

வலிகாமம் தெற்கு, மே 22

பிஸ்கட் பைக்கற்றுக்கள் மீது பொறிக்கப்பட்டுள்ள காலாவதியாகும் திகதியை அழித்துவிட்டு விற்பனை செய்த குற்றத்துக்காகச் சுன்னாகம் நகர வர்த்தகர் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிவான் 500 ரூபா அபராதம் விதித்தார்.

உணவு மருந்துப் பரிசோதகர் ரி. மகாதேவன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எஸ். எல். ஜெபராசா, ரு. பத்மகுமார், பி. சிவகுமார் அடங்கிய சுகாதாரக் குழுவினர் சுன்னாகம் நகர வர்த்தக நிலையங்களில் அண்மையில் நடத்திய திடீர்ப் பரிசோதனைகளின்போது மேற்படி வர்த்தகர் சிக்கிக்கொண்டார்.

சுகாதாரச்சீர்கேடான விடயங்களில் வர்த்தர்களும், உணவுச் சாலைகளும் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும் எனவும், எச்சரிக்கையை மீறிச் செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுன்னாகம் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற வர்த்தகர்கள் கூட்டத்தில் சுகாதாரப் பரிசோதகரால் பலமுறை எடுத்துக் கூறப்பட்டது.

எனினும், திடீர்ப் பரிசோதனைகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுக்காக ஒன்றிரண்டு தடவைகள் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை செய்ததுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாதும் விடப்பட்டு வந்துள்ளது.

குறிப்பிட்ட வியாபார நிலைய உரிமையாளர் சுகாதாரப் பரிசோதகரால் பலமுறை எச்சரிக்கப்பட்ட பின்னரும் சமூக விரோத செயலில் ஈடுபட்டதால் அவர் மீது உணவுச் சட்டத்தின் கீழ் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதிவான் கடை உரிமையாளரைக் குற்றவாளியாகக் கண்டு 500 ரூபா அபராதமாக விதித்ததுடன் நோய்களை அதிகரிக்கச் செய்யும் இப்படியான சமூக விரோதச் செயல்களில் இனிமேல் ஈடுபடவேண்டாம் என எச்சரிக்கையும் விடுத்தார்.

(க-152)

# லஞ்சத் தடுப்பு அதிகாரிகளால் பொலீஸார் மூவர் கைது!

கொழும்பு, மே 22

லஞ்சக் குற்றச்சாட்டின் பேரில் பொலீஸார் மூவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

குளியாப்பிட்டி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த விசேட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியும், பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மற்றுமொரு பொலீஸ்காரருமே லஞ்ச விசாரணை ஆணையாளரின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை லஞ்சத்தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று குருநாகல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருந்தனர். (க)

# சுகாதாரக் கருத்தரங்கும் படக்காட்சியும்

சண்டிலிப்பாய், மே 22

சுகாதார வாரத்தை முன்னிட்டுப் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொதுச்சுகாதாரம், தொற்று நோய்கள், சூழல் சுகாதாரம் ஆகியன பற்றிய திரைப்படக் காட்சியும், சுகாதார கருத்தரங்கும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மேற்படி திரைப்படக் காட்சியும் சுகாதாரக் கருத்தரங்கும் நடைபெறும்,

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையினர் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

(க-135)

# வலி. வடக்குப் பகுதியிலும் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை

### அபிவிருத்தி தொண்டர்கள் ஈடுபாடு

வலி வடக்கு, மே 22

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பரவியுள்ள பாதினியம் களையை அழிக்கும் நடவடிக்கையில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வலி. வடக்குப் பகுதி அமைப்பாளர் க. சிவகுமார் தலைமையில் அப்பகுதி அபிவிருத்தி தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காலைமுதல் இப்பணியில் ஈடுபட்ட இவர்கள் மல்லாகம் சந்திக்கு அண்மையில் உள்ள மல்லாகம்கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டடம் மற்றும் வீதி ஓரங்கள், காணிகள் ஆகிய இடங்களில் காணப்பட்ட பெரும் தொகையான பாதினியத்தை பிடுங்கி அழித்தனர்.

இந்த நடவடிக்கை இப்பகுதியில் உள்ள பாதினியச் செடிகள் முழுவதும் அழிக்கப்படும் வரை தொடரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாடு முழுவதும் தற்போது பாதினியம் ஒழிப்பு நடவடிக்கை முடுக்கி விடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம-86)

உதயன்

## திருத்தங்கள் இன்னும் தேவை

இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டம் உண்மையிலேயே பயங்கரமான சட்டம் என்பது இந்நாட்டின் சிங்கள மக்களைவிட, தமிழ் மக்களுக்குத்தான் நன்றாகத் தெரியும்!

1988, 1989 ஆம் ஆண்டுக்காலப் பகுதிகளில் - சுமார் இரண்டு வருடங்களுக்கு மட்டுமே - ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பியின்) தாக்குதல்கள் நடைபெற்ற போதே - பயங்கரவாதத்தடைச் சட்டம் எவ்வளவு கொடுமையானது என்பதனைத் தென்னிலங்கை மக்கள் கண்டறிந்திருப்பர்.

ஆனால் தமிழ்மக்களோ கடந்த இருபது வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் தமது வாழ்க்கை "கொல்லப்படுவதை" உடல், பொருள், ஆவி அனைத்தாலும் உணர்ந்தவர்கள்; அனுபவித்தவர்கள் - தொடர்ந்து அனுபவித்து வருபவர்கள்.

குற்றங்களைத் தடுக்கவும், நீதியையும், அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன; நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மக்களின் குடியியல், வாழ்வியல் உரிமைகளைப் பாதிக்காத வகையில், மனிதஉரிமைகளைப் பறிக்காத விதத்திலேயே அவை இயற்றப்படுகின்றன; அமுல் செய்யப்படுகின்றன.

ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டம் மேற்குறிப்பிட்ட நீதியியல் வரன்முறைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில், அவற்றிலிருந்து விதிவிலக்குப் பெற்ற ஒன்றாக, மனிதர்களின் எந்த உரிமைகள் குறித்தும் கவலைப்படாத, ஜனநாயகம் என்ற சீனிபூசப்பட்ட, அடக்குமுறையை - சர்வாதிகாரத்தை - நிலைநிறுத்தும் இரும்புக்குளிசையாகவே அது உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும், இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கும் பிடிக்காத எவரையும் எந்தக் காரணமும் காட்டாமல் கைது செய்யவும், அடைத்து வைக்கவும், தாம் நினைத்ததைச் சாதிக்கவும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தாராளமாக வகை செய்கிறது; உதவுகிறது.

பயங்கரவாதமும் அது சார்ந்த வன்முறைகளும் மக்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்கும் தன்மையுடையவை. அதில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும்; அதற்கான சட்டம் கடுமையானதாக இருக்க வேண்டும் என்பது விளங்கிக் கொள்ளத்தக்க ஒன்றுதான்.

ஆனால் ஒருவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னர், குற்றம் செய்தார் என்பதற்கான தகுந்த ஆதாரமே இல்லாமல், உரிய விசாரணை நடத்தப்படாமல், சித்திரவதை மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு வழக்குத் தொடர்வதற்கும்-

வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர் மீது நீண்ட காலத்துக்கு வழக்கு எதுவும் தொடராமல் தடுத்து வைக்கவும், வழக்கறிஞர் எவரும் சந்தேக நபரை உடனடியாகச் சந்தித்து அவரது தரப்பை எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் அளிக்காமல், அவரை உளவியல், உடலியல் பாதிப்புகளுக்கு ஆளாக்கவும் - பயங்கரவாதத் தடைச்சட்டம் வெகு "சிம்பிளாக" உதவுகிறது.

இந்தக் கொடுஞ் சட்டத்தின் கூரிய சரத்துக்கள் சில ஏற்கனவே திருத்தப்பட்டதனை மறுப்பதற்கில்லை. அந்த வழியில் இப்போது பயங்கரவாதச் சட்டத்துக்கு சில திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரை 14 நாள்களுக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவும், தடுத்து வைக்கப்பட்டோர் உள்ள முகாம்களுக்கு அந்தந்தப்பகுதி நீதிவான்கள் விஜயம் செய்து பார்வையிடவும் வகைசெய்யும் விதத்தில் உத்தேச சட்டத்திருத்தங்கள் வரும் என்றும் சொல்லப்படுகின்றது.

இந்தத் திருத்தங்கள் கைது செய்யப்படுவோரின் நலன்களை கணிசமான அளவு சீராக்கும் என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் இவை சில அழுத்தங்களின் பேரில் அவசரமாகக் கொண்டுவரப்படுகின்றன என்றே கருதப்படுகின்றது. இது போன்ற பல திருத்தங்கள் தேவை. அவற்றையும் கொண்டு வந்தாலேயே அரசு விசுவாசத்துடன் தானாகச் செயற்படுகிறது என்று நம்பலாம்!

# 6 ஜெனரேற்றரும் திருத்திய பின் 24 மணி நேர மின் விநியோகம்

## 3 மாத காலத்தில் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,மே22

காங்கேசன்துறையில் வைக்கப்பட்டுள்ள கூல் எயர் நிறுவனத்தின் 6 ஜெனரேற்றர்கள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் யாழ்.மாவட்டத்திற்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கூல் எயர் நிறுவனத்துக்குரிய 18 ஜெனரேற்றர்களில் 12 ஜெனரேற்றர்கள் மட்டுமே தற்போது இயங்கி வருகின்றன. ஏனையவை பழுதடைந்துள்ளன.

அவைகளைத் திருத்தும் வேலைகள் தற்பொழுது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

மூன்று மாத காலத்தில் இந்த 6 ஜெனரேற்றர்களும் திருத்தம் செய்யப்பட்டுவிடும் என்றும் - அதன் பின்னர் ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டுவரும் இடங்களுக்கு 24 மணி நேர விநியோகம் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-5)

## நாட்டு நடப்பு

கும்பியாய்க் குறுணிக் கல்லு
கூடத்தில் ஏனடி கிடக்கு?
தம்பரம்மான் பொழுது போக்காய்
தான் பொறுக்கிச் சேர்த்ததிந்தக் கல்லு
எங்கள் சங்கக்கடை அரிசி வந்தால்
எல்லாம் பொறுக்கி இவர் எடுப்பார்
தங்கச்சிக்கு மதிலொன்று கட்ட
தான் சேர்க்கும் கல்லென்பார் தம்பர்

*- மு.திருநாவுக்கரசு.*

## பல்கலைக்கழக அனுமதி வீழ்ச்சி:

# மாணவர்கள் 'மெரிட் கோட்டாவில்' தகுதிபெறத் தவறியதே காரணம்

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் "மெரிட் கோட்டாவில்" தகுதி பெறத் தவறியதாலேயே யாழ்.மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.

இவ்வாறு கவலை தெரிவித்தார் யாழ்.பலகலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் அந்த எண்ணிக்கை அனைத்துப் பாடத்துறைகளிலும் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.

பலகலைக்கழக அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்த்து எதிர்வரும் ஓகஸ்டில் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கும் பல மாணவர்கள் விண்ணப்பிக்காது இருந்தனர்.

தற்போது வெளியாகிய வெட்டுப் புள்ளிகளை அடுத்து மாணவர்கள் மத்தியில் விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழக அனுமதியும் கிடைக்கவில்லை, பரீட்சைக்கும் தோற்ற முடியாத நிலையில் உள்ள மாணவர்கள் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் கேட்ட போது அவர் மேலும் கூறியதாவது:-

ஒவ்வொரு கற்கை நெறியிலும் இருந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களில் 40 சதவீதமான இடங்களுக்குத் திறமை அடிப்படையில் முன்னணியில நிற்கும் மாணவர்கள் "மெரிட் கோட்டாவின்" கீழ் தெரிவு செய்யப்படுவர்.

ஏனைய 60 சதவீதமான இடங்களுக்கே மாவட்ட சனத்தொகை அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும்.

இந்த நியதியின் படியே இந்த வருடமும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் "மெரிட் கோட்டாவின்" கீழ் யாழ்.மாவட்டத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய 60 சதவீதமான இடங்களை நிரப்புவதற்கு மாணவர்கள் சனத்தொகை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் போது யாழ்.மாவட்டத்தில் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை கற்க அனுமதி பெற்றனர்.

ஆனால் இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் "மெரிட் கோட்டாவில்" மாணவர்கள் மிகக் குறைவாகவே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட கோட்டா மட்டுமே யாழ்.மாணவர்களுக்குக் கிடைத்துள்ளது. இதனால்தான் யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்த வருடம் ஏனைய மாவட்டங்களில் மாணவர்கள் திறமையாகச் சித்தியடைந்து "மெரிட் கோட்டாவை" பெற்றுள்ளனர். அதனால் ஏனைய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வெற்றிடம் நிரப்பு பட்டியல் மூலமும் இந்த வருடம் மாணவர்கள் உள்வாங்கப்படச் சந்தர்ப்பம் இல்லை.

எனவே இவர்கள் மீண்டும் இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதுதான் நல்லது என்று கருதுகிறேன் - என்றார் உபவேந்தர்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்ப முடிவு திகதி முடிவடைந்து விட்டதே என்று கேட்டபோது -

மாணவர்கள் பிந்திய விண்ணப்பங்களை அனுப்புவதில் தவறில்லை. அவர்களின் நிலைமையை நானும் பரீட்சைத் திணைக்களத்துக்கு எடுத்துச் சொல்லத் தயாராக உள்ளேன்.

எனவே மாணவர்கள் காலம் தாழ்த்தினாலும் இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்தால் அவர்களது எதிர்காலம் பாதிப்புறாது - என்று தெரிவித்தார். இது தொடர்பாகக் கல்வித்துறை சார் அதிகாரிகளிடமும் கேட்ட போது -

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு காலம் தாழ்த்தி விண்ணப்பித்தாலும் அவர்களது நிலைமையை கருத்தில் எடுத்து பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் எனவும் -

தவறும் பட்சத்தில் இந்த விடயத்தில் தாமும் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பரிந்துரைக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தனர். இந்த விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் விரைவாக பரீட்சைக்கு விண்ணப்பிப்பதே சிறந்த வழியாகும் - எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ஐ-6)

## நாளை

வைகாசி 9
புதன்கிழமை
திதி: அமாவாசை
முற்பகல் 9.07 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
நண்பகல் 12.14 வரை
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம் : 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

# முதல்வர் ஜெயலலிதாவுக்கு பெருமாள் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம்,மே22

தமிழகத் தேர்தலில் பெரும் வெற்றியீட்டி முதல்வராகப் பதவியேற்றிருக்கும் செல்வி ஜெயலலிதாவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெருமாள் அணியின் தலைவர் வரதராஜப்பெருமாள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அதன் விவரம் வருமாறு:-

அன்பின் சகோதரி!

நடந்து முடிந்த தமிழகத் தேர்தலில் தங்களின் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்துள்ள மகத்தான வெற்றியானது, தமிழக மக்கள் தங்கள் மீதும் தங்கள் கட்சி மீதும் கொண்டுள்ள மகத்தான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

தமிழக மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்பவும், தமிழகம் பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி பெறவும் தாங்கள் சிறந்த நல்லாட்சி வழங்குவீர்கள் என நம்புகின்றோம். அத்துடன், இலங்கைத் தமிழர்கள் தற்போது மிகவும் இக்கட்டான, துன்ப, துயரங்கள் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் இலங்கை அரசும் இந்திய மத்திய அரசும் இணைந்து செயற்படவும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாய பூர்வமான அரசியற் தீர்வு ஏற்படுவதற்குமான முன் முயற்சிகளை தாங்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

எமது தலைவர் பத்மநாபாவையும் அவரோடு எமது பன்னிரு தோழர்களையும் புலிகள் சென்னையில் படுகொலை செய்தபோது அந்தக் கொலைகாரர்களையும், அவர்களுக்குத் துணையாக இருந்தவர்களையும் சட்டத்தின் முன்னால் நிறுத்துவதற்கு தாங்கள் தங்களின் முந்தைய ஆட்சிக் காலத்தின் போது மேற்கொண்ட முயற்சிகளுக்காக தங்களை எப்போதும் நாம் நன்றியோடு நினைவு கொள்கிறோம்.

தமிழக முதல்வராக மீண்டும் பதவியேற்றிருக்கும் தாங்கள் பேர் புகழுடன் சாதனைகள் புரியும் சிறந்த ஆட்சியை வழங்கிட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஐ)

## உதயவாக்கு

மின்சாரத்தைவிட மலிவானது; ஆனால் அதிகப் பிரகாசம் அளிக்கக்கூடியது - 'புன்னகை'

## கோப்பாயில் கலந்துரையாடல்

கோப்பாய்,மே22

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில அகதிகளுக்கான ஐநா.தூதரக நுண் கருத்திட்டத்தின் கீழ் தலைமைத்துவப் பயிற்சி பெற்ற மகளிர் ஆய்வு நிறுவன உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28ஆம திகதி திங்கட்கிழமை காலை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-72)

## ஆயுள்வேத பரீட்சையில் 7பேர் சித்தி

யாழ்ப்பாணம்,மே22

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன.

ஆயுர்வேத திணைக்களத்தால் நடத்தப்பட்ட மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 7பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

பிரேமானந்தி சண்முகரத்தினம், சிவரஞ்ஜினி சிவானந்தம், சதாசிவம் உதயசந்திரன் வேலுப்பிள்ளை துரைராஜா, பிரியாந்தினி பாலசந்திரன், ரத்தினபோஸ் மற்றில்டா, ரஞ்சன் சுபத்திரா ஆகியோரே சித்தியடைந்தவர்கள் ஆவர். (க-6)

## அறநெறிப் பாடசாலைகளுக்கு சுருதிப்பெட்டிகள்!

யாழ்ப்பாணம்,மே22

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் கீழுள்ள இந்து கலாசாரத் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு 20 சுருதிப் பெட்டிகளும் 40 தாளங்களும் வழங்கப்பட்டன.

மக்கள் குறைநிவிர்த்தி சேவையின் முதல் நாள் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தச் சுருதிப் பெட்டிகளையும் தாளங்களையும் வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் 48 அறநெறிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இந்தப் பாடசாலைகளுக்கு தேவாரங்கள் அடங்கிய மூன்று தொகுதி ஒலிப் பேழைகளும் அன்று வழங்கப்பட்டன. (க-5)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

பழைய காவலரண்கள், கைவிடப்பட்ட முகாம்கள் ஒழித்துப் பிடித்து விளையாடும் இடங்களுமல்ல; குப்பை போட்டு எரிக்கும் இடங்களுமல்ல. அங்கு கண்ணிகள், மிதிவெடிகள் மறைந்திருக்கும், கவனம்!



# "வல்லவனுக்கு வல்லவன்" - பாதீனியத்துக்கு ஓர்"

பாதீனியத்தின் பாதிப்பை அறிமுகப்படுத்தும் வகையில் உதயனில் மூன்று கட்டுரைகள் தந்திருந்தோம்; ஒரு கருத்தரங்கும் நடத்தினோம். அவசியம் கருதி உதயன் ஆசிரியர் அண்மையில் ஒரு கனதியான தலையங்கமும் (EDITORIAL) தீட்டியிருந்தார். பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பல செய்திக் குறிப்புகளும் வந்தன. இத்தனைக்கும் மத்தியில் பாதீனியம். தன்பாட்டுக்குப் பரவிக்கொண்டே போகின்றது. அண்மையில் வல்லையையும் ஆக்கிரமித்துவிட்டது. வடமராட்சிக்கு வரவேற்கும் "சென்றி போஸ்ற்"றுக்கு அண்மையில் சிலவும், அங்கிருந்து கிட்டத்தட்ட 1/4 கிலோ மீற்றர் தூரத்தில், பருத்தித்துறை வீதியில் அடர்த்தியாக இரு வட்டங்களிலும் பாதீனியம் காணப்படுகின்றது. வீதியோரமாக, மண் பறித்த இடங்களில்,வட்டங்களாக இவை காணப்படுகின்றன. கொட்டு மண் மூலம் இவற்றின் கனிகள் கடத்தப்பட்டிருக்கலாம். சென்ற பருவகாலத்தில்தான் இங்கு தோன்றின; இப்பொழுது நிலைகொண்டு விட்டன. இந்த இடங்களைத் தவிர வல்லையில் வேறு இடங்களில் இல்லை. விரைவில் பரவலாம்; பொறுத்திருந்து பார்ப்போம்.

பாதீனியத்தை அறிந்ததுடன், அதன் பிரச்சினையையும் ஓரளவு புரிந்திருப்பீர்கள் என நினைக்கின்றோம்.

### கட்டுப்பாடு

பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி கட்டுரைகளிலும் குறிப்புக்கள் தந்திருந்தோம், கருத்தரங்கத்திலும் விளக்கங்கள் தந்திருந்தோம்.


பொதுவாகக் களைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பின்வரும் முறைகளைக் கையாள்வார்கள்:-

★ கைவினை முறைகள் (MANUAL)
★ பொறிமுறை முறைகள் (MECHANICAL)
★ இரசாயன முறைகள் (CHEMICAL)
★ உயிரியல் முறைகள் (BIOLOGICAL)
★ ஒருங்கிணைந்த முறைகள் (INTEGRATED)

இவற்றுள் உயிரியல் முறைகளே சூழலியல் அடிப்படையில் ஏற்றவையாகும், இவையே சூழல் நட்புடமை (ECO - FRIENDLY) உடையவையாகும்.

### உயிரியல் கட்டுப்பாடு (BIOLOGICAL CONTROL)

உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளில் குறிப்பிட்ட பீடையை(களையை)ப் பாதிக்கும் நுண்ணங்கிகளையோ (MICRO - ORGANISMS) சிறப்பாக பற்றீரியங்கள், பங்கசுக்கள், பூச்சிகள் (நாகதாளியைக் கட்டுப்படுத்த ஒரு பூச்சி புகுத்தப்பட்டமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாகதாளியின் மேல் வெள்ளைப் படலங்களாக இவற்றைக் காணலாம்), தாவரங்களைப் பயன்படுத்துவார்கள். பூச்சிகள் நேரடியாகவோ அல்லது குடம்பிகள் மூலமாகவோ கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஏனைய தாவர இனங்களைப் பாதிக்காமல், பாதீனியத்தை மாத்திரம் பாதிக்கும் பூச்சியினங்களைக் கண்டுபிடித்து பயன்படுத்த வேண்டும். அப்படி இல்லாவிட்டால் சாதகமான விளைவுகளைக் காட்டிலும் பாதகமான விளைவுகளே விஞ்சும். ஆடுதின்னாப்பாலையில் (ARISTOLOCHIA) ஒரு சிவப்பு மயிர்கொட்டியைப் பார்த்திருப்பீர்கள். இது வேறு எதையும் புசிக்காது. அதேபோலத்தான் நாகதாளியிலுள்ள பூச்சியும். இத்தகைய குடம்பியைத் தரும் பூச்சியை அல்லது பூச்சியைக் கண்டுபிடித்து பாதீனியத்துக்கு எதிராகப் பயன்படுத்தலாம். பாதீனியத்தைப் பாதிக்கும் சில பற்றீரியங்கள், பங்கசுக்கள், பூச்சிகளைக் கண்டறிந்துள்ளார்கள்.



இளந் தாவரம் - தோற்றவமைப்பு

ஆனால் இவை ஏனைய சில்தாவர இனங்களையும் பாதிக்கும் இயல்புடையனவாக இருக்கின்றன.

சூழலில் தாவரங்கள் தம்மிடையே போட்டி போட்டுக் கொண்டுதான் பிணைத்து வாழ்கின்றன. அதனால் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய ஏற்ற தாவர இனங்களைப் பயன்படுத்துவது சுலபமான - சூழலுக்கு ஏற்ற - முறையாகும். இதற்கு உள்ளூர்த்தாவர இனங்களாகக் கண்டறிந்தால் மிகவும் ஏற்றதாக அமையும்.

### பாதீனியத்தைக் கட்டுப்படுத்த ஏற்ற தாவர இனங்களைப் பயன்படுத்துதல்

இது மிகச் சுலபமானதும் ஏற்றதுமான முறையாகும். கர்நாடகாவில் கசியா செறிசெயா என்ற தகரையினத் தாவரம் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் எனக் கண்டறிந்துள்ளார்கள். அங்குள்ள ஒரு நிறுவனத்தினர் இதன் விதைகளைச் சேகரித்து வேண்டிக் கேட்பவர்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். தமிழ்நாட்டில் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த தகரை, பொன்னாவாரை, ஆவாரை, தும்பை, கொழிஞ்சி போன்ற தாவரங்களைப் பயன்படுத்தலாம் என அறிவுறுத்தி உள்ளார்கள். இவற்றை இனங்காண்பதற்காக உள்நாட்டுப் பெயர்களையும் விஞ்ஞானப் பெயர்களையும் இங்கு தருகின்றோம்:-


தகரை - தகரை பேயவரை, - CASSIA OCCIDNTALIS
பொன்னாவாரை - பொன்னாவரசு - CASSIA SOPHERA
ஆவாரை - ஆவரசு - CASSIA AURICULATA
தும்பை
கொழிஞ்சி - காவிளாய் - TEPHROSIA PURPURIA

தும்பை என்று எதைக் குறிப்பிடுகிறார்களோ தெரியவில்லை. காசித் தும்பையாக (INPATIENS BALSAMINA BALSAM) அல்லது முடிதும்பையாக (LEVCAS ZEYLANICA/ L.ASPERA) இருக்கலாம்.

### நமது நாட்டில் நிலை

நாயுண்ணி (LANTANA CAMARA), எருக்கலை (CALOTROPIS GIGANTIA), காட்டாமணக்கு அல்லது எலியாமணக்கு (JATROPHA GLANDULIFERA AND J.GOSSYPIFOLIA - இரு இனங்கள்), பீநாறி அல்லது செங்கன் குப்பி அல்லது சடவக்கை அல்லது பிஞ்சில் (CLERODENDRON INERME), காண்டை அல்லது காட்டுமிளகு (TODDALIA ASIATICA) போன்ற தாவரங்கள் உள்ள புறம்போக்கு நிலைகளில் பாதீனியம் அடக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆயினும், இவையெல்லாம் பெரிய செடிகள். அதனால் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்துவதற்கு ஏற்றவை அல்ல - குறிப்பாக வளவுகளிலும், தோட்டங்களிலும், வீதியோரங்களிலும்.




பூச்சித்திரமும் பூச்சூத்திரமும்

நமது நாட்டில் கசியா செறிசெயா இல்லை; ஆயினும் வேறு தகரை இனங்கள் உண்டு. சிறப்பாக தகரையும் (பேயவரை - CASSIA OCCIDENTALIS), வட்டத் தகரையும் (வட்டுத்தகரை/பாண்டித்தகரை/ஊசித் தகரை - CASSIA TORA). இவை மாத்திரமல்லாமல் காவிளாய் (TEPHROSIA PURPURIA), அவரி (நீலம் - INDIGOFERA TINCTORIA), கிலுகிலுப்பை இனங்கள் (CROTALARIA SPP), கறுத்தப் பூக்கொடி (கருவில்லை/ காகட்டான் கொடி CLITORIA TURNATEA) போன்ற அவரையினத் தாவரங்களும் உண்டு. பாதீனியத்தை கட்டுப்படுத்த இவற்றைப் பயன்படுத்தலாம்; பரீட்சித்துப் பார்க்கவேண்டும். அவரையினத் தாவரங்களைப் பயன்படுத்துவதில் பல அனுகூலங்கள் உண்டு. அவற்றுட் சில:- இவை மூடு தாவரங்களாக அமைந்து காற்றினாலும் நீரினாலும் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்க உதவும்; மழைகாலங்களில் நீரை விரைந்தோடாமற்றடுத்து, நீர் பெருமளவில் நிலத்துள் செல்ல உதவி நிலத்தடி நீரின் அளவை அதிகரிக்க உதவும்; இவற்றின் வேர் முடிச்சுகளில் உள்ள பற்றீரியங்களின் உதவியினால் நைதரசன் நாட்டம் செய்து மண்ணிலுள்ள நைதரசன் வளத்தை அதிகரிக்க உதவும்; சகலதும் சிறந்த பசுந்தழை உரங்கள்; பல சிறந்த மூலிகைத் தாவரங்கள்; சில கால்நடை உணவாகவும் இலைக்கறி உணவாகவும் பயன்படும்.

புகையிலைப் பயிர் செய்பவர்கள் பசுந்தழை உரமாகப் புதைப்பதற்கு காவிளாய்ச் செடியை நாடிச் செல்வதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

### ஆயப் பிரதேசமும் I.P.K.F. பாசறையும்

வடமராட்சி, கரவெட்டியில் ஆயம், கற்பாதி, கேவளை, அந்திரான் ஆகிய தோட்ட நிலங்களை அடக்கியதாக பரந்த வெளியில் பாரிய I.P.K.F. பாசறை இருந்தது. அண்மையில் இப்பிரதேசத்தின் நிலைமையை அறிவதற்காகச் சென்றிருந்தோம். சில இடங்களில் பயிற்செய்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஆயத்துச் சந்தியும் அண்டிய பிரதேசமும் இராணுவ வசமே உள்ளது. இப்பிரதேசத்தில் பாதீனியம் பரவலாகவுள்ளது. ஒரு புதிய செடியினமும் காணப்பட்டது. இச்செடி இப்பிரதேசத்திற்கு வெளியே இல்லை; குடாநாட்டில் வேறு எங்கும் இல்லை - நாம் அவதானித்தவரை. பாதீனியத்தைப் போல இதுவும் I.P.K.F.வின் மூலம் புகுந்ததாகத் தெரிகின்றது. குடும்பம் இலெகுமினோசி, உப குடும்பம் பப்பிலியோனேசிக்குச் சேர்ந்த இச்செடியை எலியோற்றிஸ் சொறோறியா (ELEIOTIS SORORIA) என இனங்கண்டுள்ளோம்.



இலைகள், முதிர்பூந்துணர்கள், இளம்பூந்துணர்கள், கனிக் கொத்துக்களுடன் கூடிய கிளை

இப்பிரதேசத்தில் சில இடங்களில் மருளூமத்தை அல்லது ஆனை ஒட்டொட்டி (XANTHIUM STRUMARIUM) அடர்த்தியாகக் காணப்பட்டது. இத்தகைய இடங்களில் பாதீனியம் ஒடுக்கப்பட்டதாக காணப்பட்டது; அல்லது இல்லை. மருளூமத்தை பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதாகத் தெரிகின்றது.

ஆயினும், குடாநாட்டைப் பொறுத்தவரை, மருளூமத்தையும் ஒரு வந்தேறு குடி. இதுவும், பாதீனியத்தைப் போல, கொம்போசிற்றே/அஸ்ரரேசி (COMPOSITAE/ ASTERACEAE) குடும்பத்திற்கு உரியது. விலங்குகள் மூலம் பரவும். மூலிகைத் தாவரமாகக் கருதப்படுகிறது.

K.S.Kugathasan M.Sc.

வேறு உபயோகம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இதனை ஏற்றதாகக் கொள்வது வியாகூலமாகப் போகலாம்.

எலியோற்றிஸ் அடர்த்தியாக உள்ள இடங்களிலும் பாதீனியம் கட்டுப்பாட்டில் உள்ளது. அல்லது இல்லை. எலியோற்றிஸ் அவரைக் குடும்பத்தாவரம். அதனால் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இதனைப் பயன்படுத்துவது அநுகூலமாக அமையலாம். ஆனால் இது போதியளவு இல்லை. அதனால் உள்ளதைப் பராமரிக்க வேண்டும்.

மேலும் பாதீனியத்தைப் போல இது சுலபமாகவும், வேகமாகவும், அதிகளவிலும் பரவக்கூடியதல்ல. காவிளாய், அவுரி, தகரை போன்ற தாவரங்களைப் போலத்தான் இதுவும் பரவும். அதனால் இதன் பரம்பலுக்கு மனித உதவி தேவைப்படும்.

பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே குறிப்பிட்ட உள்ளூர்த்தாவரங்களையோ அல்லது எலியோற்றிஸ்ஸையோ பயன்படுத்தி வெற்றிகாண முடியும்.

*எலியோற்றிஸ்ஸின் விவரணம்:*


*பெயர்:-* ELEIOTIS SORORIA. *குடும்பம்:-* LEGUMINOSAE/ FABACEAE. *உபகுடும்பம்:-* PAPILIONACEAE. *தமிழ்ப் பெயர்:-* கிடைக்கவில்லை. *ஆங்கிலப் பெயர்:-* கிடைக்கவில்லை. *வாழிடம்:-* ஈரவலயத்தாழ்நாடு; மிக அருமை; 1862 இல் பேர்குசனால் (FURGUSON) கொழும்புக்கு அண்மையில் மாத்திரம் சேகரிக்கப்பட்டது; ஏனைய இடங்களிலும் இருந்திருக்கலாம்; அவதானிக்கப்படாது போயிருக்கலாம். இந்திய தீபகற்பத்திலும் (PENINSULAR INDIA) உண்டு. *தோற்றம்:-* ஓராண்டுக்குரிய செடி; அழுத்தமானது (மயிரற்றது); கிளைகொண்டது; நெருக்கமாக, கூடி வாழுகின்ற (GREGARIOUS) இயல்புடையது. *வேர் :-* மூலவேர்த் தொகுதி. *தண்டு:-* நெடியவை; மெல்லியவை மூவோரமுள்ளவை (TRIQUETROUS); அழுத்தமானவை; கோணங்களில் இலேசாகச் செட்டையுள்ளவை. *இலை:-* தனியானவை; ஒரு சீறிலை. சிறியதிலிருந்து இடைப்பட்ட அளவுவரை. உருவம் முட்டையுரு அல்லது நீள்முட்டையுரு அல்லது வட்டித்தது. மேற்பக்கம் அழுத்தமானது. கீழ்பக்கம் இலேசாக மயிருள்ளது. இலையடிச் செதில்களை உடையது. இலையடிச் செதில்கள் சிறியவை; முக்கோண வடிவுடையவை; மென்சவ்வு போன்றவை (செதில் போன்றவை). இலைகள் காம்புள்ளவை. காம்பு மெல்லியது. 1/4 -

# ...ஓர் "எலியோற்றிஸ்"


*பாதீனியத்தைத் தெரிந்து வைத்திருப்பது மாத்திரமல்லாமல் அது பற்றிய உணர்வும் அவசியம். ஒவ்வொரு பொதுமகனும் இதைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபாடு கொள்ளவேண்டும். ஒவ்வொரு பொது மகனும் தமது வளவிலோ, தோட்டத்திலோ, தெருவிலோ பாதீனியம் இருந்தால் அதைப் பிடுங்கி எரிப்பதில் ஈடுபடவேண்டும். இங்ஙனம் தொடர்ந்து செய்தால் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். முற்றாக அழிப்பது இப்போதைக்கு இயலாதகாரியம். பொதுமக்கள் போக முடியாத பல இடங்களிலும் பாதீனியம் உண்டு. அங்கிருந்து அது பரவிக்கொண்டே இருக்கும். எல்லோரும் ஒன்றுபட்டு உழைத்தால் பாதீனியத்தை கட்டுப்படுத்த முடியும். முற்றாக அழிப்பதைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம்.*

3/4 அங்குலம் அல்லது சற்றே அதிக நீளம். ஒன்று விட்ட (சுருளி) இலையொழுங்கு. விளிம்பு பல்லுள்ளது. பற்கள் சிறியவை. உச்சி கூரானது. (குறுங்கோணத்திற்கு உரியது). *பூந்துணர்:-* கக்கத்திற்குரிய நுனிவளரிகள் நெடிய (1 1/2 - 2 அங்குலங்கள்) மெல்லிய காம்பின் முனையில் 1/2 - 1 அங்குல அச்சில் நெருக்கமாகப் பூக்கள் (பூந்துணர் அச்சின் முழு நீளம் 2-3 அங்குலங்கள்). பூந்துணர் அச்சு மென்மயிர் உள்ளது. *பூக்கள்:-* சிறியவை. குறுகிய காம்புள்ளவை; பூவடியிலை உள்ளவை, இருபக்கச் சமச்சீரானவை, இருபாலுள்ளவை; சூலக கீழ் நிலையானவை; முழுமையானவை. *புல்லி வட்டம்:-* புல்லியிதழ்கள் ஐந்து; இணைந்தவை; குழாயுருவானது; பெரியது; பூவினதும் கனியினதும் பெரும் பகுதியை மூடியிருக்கும். மயிர் செறிந்தது. *அல்லி வட்டம்:-* இதழ்கள் ஐந்து. இறங்குகின்ற ஒட்டடுக்கானது. வண்ணத்துப்பூச்சி வடிவானது (PAPILIONACEOUS), ஒரு கொடியல்லி, இரு சிறைப்பல்லிகள், இரு ஓர அல்லிகள். ஏரா அல்லிகள் கீழ்ப் புறமாக இணைந்திருப்பதுடன் சிறையல்லிகளுடனும் இணைந்திருக்கும். மென் ஊதா நிறம். *ஆணகம்:-* கேசரங்கள் பத்து. ஒன்பது ஒன்றாக இணைந்திருக்கும். ஒன்று தனியாக இருக்கும். [(9)+1]. கேசர மடலினுள் ஜோனி வைக்கப்பட்டிருக்கும். *பெண்ணகம்:-* ஒரு சூல் வித்திலையுள்ள, ஒரு வித்தறையுள்ள, விளிம்பிற்குரிய சூல் வித்தமைப்புள்ள, உயர்வுச் சூலகம். தம்பம் பக்கத்திற்குரியது. குறி துலக்கமற்றது. சூல்வித்து ஒன்று. *கனி:-* ஒரு விதை உள்ள அவரையம் (உறையம்/நெற்று). சிறியது. ஓடம் போன்ற வடிவுடையது. (விவரணம் தாவரத்தை நேரடியாக ஆராய்ந்து பெறப்பட்டவை).

*பயன்கள்:-* பயன்கள் தொடர்பாக விளக்கம் எதுவும் கிடைக்கவில்லை. ★



பூ



பாதிப் பூ


**REFERENCES:-**

1. TRIMEN. H - A HAND BOOK TO THE FLORA OR CEYLON - PART II
2. HUTCHINSON. J - THE GENERA OF FLOWERING PLANTS (BASED ON GENERA PLANTARUM - BENTHAM AND HOOKER)
3. DRURY. H - HAND BOOK OF INDIAN FLORA.


## மனிதனுக்கு விலங்குகளின் கலங்கள்:


# நவீன ஆராய்ச்சிகள் தருவது நோயையா? மருந்தையா?

மனிதனுக்கு ஏற்படும் நோய்களுக்கு நிவாரணம் தேடி விலங்குகளை நாடும் ஆராய்ச்சிகள் புதியவை அல்ல. தற்போதைய ஆராய்ச்சிகளினால் பன்றிகளுக்கு இறைச்சிக் கடைகளை விட ஆய்வுகூடங்களில் பெரும் மவுசு ஏற்பட்டிருக்கின்றது.

இரத்த அழுத்தம் காரணமாக மூளைக் கலங்கள் பாதிக்கப்படுதலினால் ஏற்படும் ஸ்ரோக் (Stroke) மனிதனின் அவயவங்களை இயங்கவிடாமல் முடக்கி படுக்கையில் கிடத்தி விடுகின்றது. இதனைப் பாரிசவாதம் என்றும் கூறுவர்.

இத்தகைய நோய்களினால் கடுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் அதன் தாக்கத்தில் இருந்து விடுபடமுடியாமல் வாழ்க்கை முழுவதும் அழுந்துவதே விதியாக உள்ளது. வைத்திய வசதிகள் அதிகம் உள்ள மேற்கு நாடுகளில் இத்தகைய தாக்கங்களினால் பாதிக்கப்படுபவர்களின் உடல் நிலை சற்றுத் துரிதமாகவே தேறி வந்தாலும் இவர்களால் பழைய நிலையை எட்ட இயலுவதில்லை.

பன்றியின் உடல் இழையங்கள் மனிதனின் இழையங்களுடன் அதிகம் பொருந்தி உள்ள தன்மை அறியப்பட்ட நிலையில் அண்மையில் நடைபெற்ற பரீட்சார்த்தமான சிகிச்சை ஒன்று பெரு வெற்றி கண்டிருக்கின்றது. இருபது வயதில் ஸ்ரோக்கினால் பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருத்திக்கு வாழ்க்கை முழுவதும் படுக்கையே தஞ்சம் என்ற நிலைமை, பன்றியின் முளைய மூளைக் கலங்களினால் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனை வாழ்க்கையில் ஒரு பெரும் வரப்பிரசாதம் என்றே கருத இடம் உண்டு.


ஆய்வுகூடத்து நுழைவாசலிலே

நோயாளியின் மண்டை ஓட்டில் சரியான இடத்தில் துளை இடப்பட்டு அதன் ஊடாக துல்லியமாக சுமார் 80 மில்லியன் பன்றியின் மூளைக் கலங்கள் செலுத்தப்பட்டன. இதற்கான கலங்கள் ஆய்வுகூடத்தில் வளர்க்கப்பட்ட முதிர்ச்சி அடைந்த கருவில் இருந்தே பெறப்பட்டன. அக்கலங்கள் மனித மூளையில் வேரூன்றி விருத்தியடைந்ததும் நோயாளியின் நிலைமையில் துரித முன்னேற்றம் காணப்பட்டிருக்கின்றது.

சிகிச்சையினைத் தொடர்ந்து அவளால் நடக்கவும் ஏன் கொஞ்சம் ஓடவும் இயலுகின்றது. மூளை வளர்ச்சியில் மேலும் முன்னேற்றம் காணப்படுமிடத்து அவள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பிவிடும் சாத்தியம் உண்டு என நம்பப்படுகின்றது.

மனிதனுடைய மூளையில் இழக்கப்படும் கலங்கள் பொதுவாக மீளப் புதுப்பிக்கப்படாமையாலேயே ஸ்ரோக் ஒரு நிரந்தரமான பிரச்சினையாக உருவெடுக்கின்றது. இந்தப் புதுப்பித்தலை பன்றியின் மூளைக் கலங்கள் இலகுவில் செய்து விடுகின்றன. இதனால் நோயாளியின் மூளை இலகுவில் இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுகின்றது.

இத்தகைய வைத்திய முறைகள் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே மேற்கு நாடுகளில் உள்ளன. பன்றி இறைச்சியையே சரிவரச் சமைக்காமல் சாப்பிடுவது சுகாதாரத்திற்கு பெரும் கேடு என்று கருதும் நிலையில் பன்றியின் உயிருள்ள கலங்களை உடலிலே தாங்கி வரும் மனிதர்களைக் கண்டால் அஞ்சி ஓட வேண்டிய நிலைமை எழுவதும் நியாயமாகத்தான் படுகின்றது.

மேற்குலக முன்னணி மருத்துவ ஆய்வு கூடங்கள் தற்போது பன்றி வளர்ப்புப் பண்ணைகளாக மாறி வருகின்றன. பன்றிகள் மரபணு மாற்றத்திற்கு உள்ளாகி மனித DNA மரபணுக்களை சுமந்து வளர்வதும் ஆய்வு கூடங்களில் சர்வ சாதாரணம் ஆகிவருகின்றது.

மூர்க்க குணமும் அருவருப்பான பழக்கவழக்கங்களும் கொண்ட பன்றிகள் மனித மரபணுக்களை பெற்று வளரும் போது திருந்திவிடவும்கூடும். அல்லது மனித இனத்திற்கே அச்சுறுத்தலாகவும் அவை எழக்கூடும்.

பன்றியின் இதய வால்வுகள், ஓமோன்கள் என்பன ஏற்கனவே பல காலம் மனிதனுக்கு சிகிச்சையில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குளோனிங்முறையில் ஆய்வு கூட கண்ணாடிப் பேழைகளில் வளர்க்கப்படும் பன்றி முளையங்கள் இதற்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய ஆராய்ச்சிகளின் பயன் ஒரு சிலரது உயிரை சில காலம் தக்க வைத்துக்கொள்ளவோ அவர்களது இயல்பு நிலையைப் பேணவோ உதவினாலும் அவற்றிற்கான பக்க விளைவுகள் பாரதூரமானவை எனவும் பல ஆராய்ச்சியாளர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

வளர்ப்புப் பிராணிகளிடம் நெருங்கிப் பழகும் குழந்தைகளுக்கு பலவித நோய்கள் வருவது பற்றி எல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். தவிர குரங்கோடு உறவு கொண்டதால் மனிதன் எயிட்ஸைப் பெற்றதாக நம்பப்படுகின்றது. அதேவகையில் நாயிடம் இருந்து றேபீஸ் வைரஸ் மற்றும் பல நோய்களும் மனிதனுக்கு வரும் சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. ஒரு சிலரது விநோதமான பாலியல் பழக்க வழக்கங்கள் மனித இனத்தையே முற்றிலும் வேரறுக்கப் போதுமானவை ஆகின்றன. காசநோய், பிளேக், சின்னம்மை போன்றவையும் விலங்குகளிலிருந்தே மனிதனுக்கு பரவியதாக கருதப்படுகின்றது.

எனவே பன்றி வைத்தியம் எதில் போய் முடியுமோ என்ற அச்சம் நியாயமானதே. விலங்குகளில் எளிதில் தொற்றும் வைரஸ்'க்கள் அவற்றிற்கு சாதாரணமாகத் தென்பட்டாலும் மனிதனைப் பொறுத்தவரை அவை தமது கோரத்தைக் காட்டி விடுகின்றன.


பிரிட்டனில் கால்நடைகளை சில ஆண்டுகளுக்கு முன் மாட்டுப் பைத்தியம் (Mad Cow) என்ற நோய் ஆட்டிப் படைத்தது. இறைச்சி வகைகளை உண்ணப் பலரும் பின்னடித்தார்கள். தற்போது ஐரோப்பிய நாடுகளில் Foot and Mouth என்ற நோய் ஆடு மாடுகளையும் பன்றிகளையும் பெருமளவில் பாதித்து இருக்கின்றது.


மனித மரபணு புகுத்தப்பட்ட பன்றி

தற்போது இறைச்சியை உண்ண ஐரோப்பிய மக்கள் தயங்குகிறார் கள். முன்னர் மாட்டுப் பைத் தியம் என்ற பீதியும் தற்போது Foot and Mouth என்ற பீதியும் பலரையும் அசைவ உணவு களைத் தவிர்க்க வைத்துவிட்டது. பிரதானமாக மாட்டு இறைச்சியை முற்றாகத் தவிர்க்கும் நிலைக்கு அதையே நம்பியிருந்த ஐரோப்பிய நாடுகள் தள்ளப்பட்டுவிட்டன. ஆசிய பாரம்பரிய தாவர உணவுகளை விரும்பி உண்ணும் நிலைக்கு அவர்கள் ஆளாகி விட்டார்கள்.

பல விலங்கு வேளாண் பண்ணையாளர்கள் தமது தொழிலையும் முதலையும் இழந்து வருகின்றார்கள். விரக்தி முற்றிய நிலையில் சிலர் தற்கொலைக்குக் கூட முயல்கிறார்கள். பிரிட்டனின் சுமார் 160,000 பண்ணைகளில் 1500 இல மட்டுமே இந்நோய் தீவிரமாகத் தாக்கி உள்ளது. நோய் பரவுதலைத் தடுக்க இலட்சக் கணக்கில் கால்நடைகள் தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கொல்லப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை இதுவரை ஒரு மில்லியனைத் தாண்டுகின்றது. இனி வரும் மாதங்களில் நோய்ப்பரம்பல் கட்டுப்படாத போது இத்தகைய உயிரின அழிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரமடையலாம் என அஞ்சப்படுகின்றது.

பிரிட்டனில் இருந்து இறைச்சியை இறக்குமதி செய்யும் நாடுகள் இறக்குமதியைத் தடை செய்துள்ளன. இவ்வைரசுக்கள் விரைவாக விலங்குகளில் பரவி கடுமையான தாக்கத்தைத் தரவல்லன. எனினும் இவை மனிதனில் பாரிய தாக்கம் எதையும் ஏற்படுத்துவதாக இதுவரை அறியப்படவில்லை. ஆனால் சாதாரண காய்ச்சல் போன்ற குணங்குறிகள் மனிதனுக்கு ஏற்படுவதுண்டு. எனினும் அது அஞ்சப்படவேண்டிய ஒன்றாகவே கருதப்படுகின்றது. இந்நோய்க்கு தடுப்பு மருந்து ஒன்றைக் கண்டுபிடிக்கும் ஆய்வில் 1954 முதல் முயன்று வரும் அமெரிக்க ஆய்வு கூடம் ஒன்று இன்றுவரை மருந்தைக் கண்டுபிடித்ததாக இல்லை.


மனிதனுக்குத் தேவையான மூளைக் கலங்கள் பிரித்து எடுக்கப்படுகின்றன.

ஆய்வு கூடத்தில் தொற்று ஏற்படுதலைத் தடுக்க வேண்டி கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகள் அமுலில் உள்ளன. தனியான ஒரு தீவில் முட்கம்பி வேலிகள் இடப்பட்டு எவரும் பிரவேசிக்க முடியாத வகையில் ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. படகுகளில் வந்து இறங்கும் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் முதலில் ஆய்வுகூட முகப்பில் தமது ஆடைகள் ஆபரணங்கள் செருப்புச் சப்பாத்துக்கள் அனைத்தையும் துறந்து பிறந்த மேனியுடன்தான் ஆய்வு கூட ஓடையின் ஊடே உட்புக முடியும். உள்ளே செல்லும் போதும் வெளியேறும்போதும் எச்சில் துப்பி மூக்கைச்சிந்தி குளித்து உலர்த்தியே எல் லைகளைக் கடக்க முடியும். ஆய்வு கூடத்தினுள் கடமையில் உள்ளபோது அவர்கள் அணியும் ஆடைகள் வெளிஉலகைக் காணாதவை. வெளிஉலகில் அவர்கள் அணியும் ஆடைகள் ஆய்வுகூடத்தினுள் புகுந்ததாக வரலாறு இல்லை. பணியாளர்கள் சிலர் நாளொன்றுக்கு பத்துத் தடவைகள்கூட குளிக்க வேண்டிய தேவைகளும் எழுந்ததுண்டு என்கிறார்கள்.

இத்தனை எச்சரிக்கை நடவடிக்கைகளை மீறி சாதாரண மனிதனின் அசண்டையால் நோய்க் கிருமிகள் வேகமாகப் பரவிவிடுகின்றன. ஆய்வு கூட நிர்வாகம் இந்த நிலையில் விரக்திஅடைந்துள்ளது. உல்லாசப் பயணிகளும் இறைச்சிப் பிரியர்களும் கட்டுப்பாடற்ற பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களும் பெரும் எடுப்பில் விலங்குக் கிருமிகளைப் பரப்ப முனைகிறார்கள் என்பது ஆய்வாளர்கள் பலரதும் வாதம். ★

அம்பிகா

# சின்னஞ்சிறு விளம்பரம்

## படிவம்

இலங்கை விவசாயக் கல்லூரி களில அனுமதி பெறுவதற்கான போட் டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. வர்த்தமானி பார் வைக்கு உண்டு. பாரதி, 430, காங் கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/16689)

## இலக்கியக் கட்டுரைகள்

'ஓர்ஆசிரியர் பென்ஷன் எடுக்கிறார்' நாடகத்தை வானொலியில் கேட்டீர் களா? அராலியூர். ந.சுந்தரம்பிள்ளை "சஞ்சீவியல்" எழுதிய சிறுகதையைத் தான் நாடகமாக்கியிருக்கிறார். அவ ரது இலக்கியக் கட்டுரைகள் நூலை வாசித்துப் பயனடையுங்கள். (88012)

## தவறிவிட்டது

ஆனைக்கோட்டை, சாவற்காட்டைச் சேர்ந்த சமரபாலா யான்சன் என்பவ ருடைய விசேட அடையாள அட்டை (இல.0905022502) 16.05.2001 இல் பழைய O.P.T க்கு முன்னால் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ப.செல் வராணி, கொக்குவில் ஸ்ரேசனடி (பாலசிங்கம் விடுதி அருகில்) ஒப்ப டைத்துதவவும். (88058)

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சின்னத் துரை சுமித்ரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.761543563V), விசேட அ.அட்டை என்பன 18.05.2001இல் புத்தூருக்கும் யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் இல.18, நவீன சந்தை, லிங்கம் சில்க்ஸில் ஒப் படைத்துதவவும். (88059)

## தேவை

தரமான வேப்பம்பூ தேவை. தொடர்பு கொள்ளவும்:- அண்ணா, இணுவில். (C/16794)

## விற்பனைக்கு

நெல்லியடி, திக்கம் றோட்டில் வதிரி உல்லையன் நல்லை அம்மன் கோயிலுக்கு அருகில், யாழ்.நெல்லி யடி மெமிதகலைவன் பாடசாலை ஒழுங் கையில் சுந்தரலிங்கம் விதானையார் வீட்டில இந்தியாவில் இருந்து தருவிக் கப்பட்ட நவீனரக கல்யாணக் கூறை கள், காஞ்சிபுரச் சேலைகள், கல்யாண, நடன மேக்கப் செற் மற்றும் பல. தொடர்பு: சு.சுந்தரலிங்கம் விதானை யார், ஆடுபாவத்தை, வதிரி, கர வெட்டி. (87969)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1973 - 04 - 22

விண்ணில் 1999 - 05 - 15

## அமரர் மிருகண்டு ஜெயக்கொடி

(பிரபல வர்த்தகர் - வவுனியா)

திதி : 2001-05-22

காலங்கள் நகர்ந்தாலும  
மகனே உமது ஞாபகங்கள் நகர்வதில்லை  
பழுதறியாப் பண்புடைய மகனே!  
கொழுமவன் காலன் காலில் நாமும் வந்து  
சேரும் வரை நம் துயரம் ஆறாதையா!

துன்னாலை, கரவெட்டி.  
(C/16793)  
ச.சற்குணானந்தம் (பெரியையா),  
ச.அன்னமலர் (பெரியம்மா)

# 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 27 - 09 - 1953

மறைவு 27 - 05 - 1987

## அமரர் வி.லிங்கரட்ணம்

அன்போடு எமை வளர்த்து ஆளாக்கிய அப்பாவே!  
ஆண்டு 14 ஆகியும் மறக்கமுடியுமா உங்களை?  
என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் இருந்து  
நினைவாக நிறைந்து விளங்குகின்றீர்கள் அப்பா!

இன்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை அன்னாரது நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் 14 ஆம் ஆண்டுத் திவச ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, மக்கள்.

*18/1, கலட்டி அம்மன் வீதி,*  
*கே.கே.எஸ்.றோட், தட்டாதெரு,*  
*யாழ்ப்பாணம்.*  
(88064)

# வெள்ளைப்பூரான் கடித்து 46பேருக்கு இதுவரை சிகிச்சை

வடமராட்சிப் பகுதியில் கடந்த ஐந்து மாதங்களில் 46 பேர் வெள் ளைப்பூரான் கடிக்கு இலக்காகி மந் திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற் றுள்ளனர்.

இதேவேளை -

கடந்த சனிக்கிழமை வடமராட்சி யின் வெவ்வேறு இடங்களில் வெள் ளைப்பூரானால் கடியுண்ட மூவர் மந் திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த சிவசுந்தரம் சிவஜன் (வயது 4), உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சிற்றம்பலம் சுதாகரன் (வயது 17), துன்னாலை மத்தியைச் சேர்ந்த கன கரத்தினம் கனகேஸ்வரன் (வயது 36) ஆகியோரே அந்த மூவரும் ஆவர். (க-117)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் பெற்றோர் விவரம்

இம்மாதம் 15 ஆம் திகதி வரை யும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதி யாக, வருமாறு:-

## யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (103060ஏ) | (182021ஏ) | (188910ஏ) |
| (188910பி) | (189606ஏ) | (189606பி) |
| (189610ஏ) | (189620ஏ) | (190881ஏ) |
| (190881பி) | (190881சி) | (191060ஏ) |
| (191060பி) | (191083ஏ) | (191091ஏ) |
| (191132ஏ) | (191132பி) | (191132சி) |
| (191132டி) | (191170ஏ) | (191170பி) |
| (191170சி) | (193029ஏ) | (193029பி) |
| (193029சி) | (193031ஏ) | (193041ஏ) |
| (193105ஏ) | (193105பி) | (193105சி) |
| (193105டி) | (193112ஏ) | (193112பி) |
| (193191பி) | (193204ஏ) | (193204பி) |
| (193227ஏ) | (193227பி) | (193238ஏ) |
| (193238பி) | (193270ஏ) | (193270பி) |
| (193282ஏ) | (193360ஏ) | (193360பி) |
| (193391ஏ) | (193391பி) | (193396ஏ) |
| (193408ஏ) | (193412ஏ) | (193412பி) |
| (195193ஏ) | (195193பி) | (195194ஏ) |
| (195194பி) | (195194சி) | (195194டி) |
| (195194ஈ) | (195194எவ்) | (195216ஏ) |

## கோப்பாய்

| | | |
|---|---|---|
| (180181ஏ) | (190808ஏ) | (190808பி) |
| (191039ஏ) | (193022ஏ) | (193066ஏ) |
| (193099ஏ) | (193099பி) | (193099சி) |
| (193100ஏ) | (193100பி) | (193183ஏ) |
| (193183பி) | (193317ஏ) | (193356ஏ) |
| (193356பி) | (193356சி) | (193409ஏ) |

## நல்லூர்

| | | |
|---|---|---|
| (103226ஏ) | (103226பி) | (182010ஏ) |
| (182010பி) | (183217பி) | (184695ஏ) |
| (186286ஏ) | (186286பி) | (188903ஏ) |
| (188903பி) | (189003ஏ) | (189004ஏ) |
| (189013ஏ) | (190847ஏ) | (190847பி) |
| (190847சி) | (191113ஏ) | (191121ஏ) |
| (191154ஏ) | (191175ஏ) | (191200ஏ) |
| (191200பி) | (191230ஏ) | (191230பி) |
| (191230சி) | (191230டி) | (191232ஏ) |
| (191232பி) | (191232சி) | (191232டி) |
| (191232ஈ) | (193021ஏ) | (193021பி) |
| (193090ஏ) | (193090பி) | (193104ஏ) |
| (193104பி) | (193128ஏ) | (193132ஏ) |
| (193132பி) | (193156ஏ) | (193157ஏ) |
| (193157பி) | (193168ஏ) | (193168பி) |
| (193168சி) | (193174ஏ) | (193174பி) |
| (193174சி) | (193174டி) | (193174ஈ) |
| (193174எவ்) | (193191ஏ) | (193208ஏ) |
| (193208பி) | (193217ஏ) | (193217சி) |
| (193272ஏ) | (193305ஏ) | (193305பி) |
| (193314ஏ) | (193314பி) | (193314சி) |
| (193394ஏ) | (193397ஏ) | (193404ஏ) |
| (193404பி) | (193414ஏ) | (193414பி) |
| (193463ஏ) | (193482ஏ) | (195157ஏ) |
| (195199ஏ) | (195199பி) | |

(க-10)

# படையினர் வசமுள்ள வீடுகளுக்கு வாடகை வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.மாவட்டத்தில் படையினர் வசமிருக்கும் வீடுகளுக்கு வாடகை செலுத்தப்பட வேண்டும் என்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சினால நடத் தப்பட்ட மக்கள் குறை நிவர்த்தி சேவை யில் கலந்து கொண்ட படை அதிகா ரிகளிடம் பொதுமக்களினால் வேண்டு கோள் விடுக்கப்பட்டது.

இந்தக் குறை நிவிர்த்தி சேவை யில் கடற்படை, இராணுவம், விமா னப்படை மற்றும் பொலீஸ் போன்ற வற்றின் உயர் அதிகாரிகளுக்கென செயலகம் ஒன்று அமைக்கப்பட்டிருந் தது.

இந்தச் செயலகத்தில் படை யினர் வசமிருக்கும் வீட்டு வாடகை மற்றும் தொலைபேசி இணைப்புப் பெறுவதற்கான பாதுகாப்பு அனுமதி, விசேட அடையாள அட்டை பெறு தல், காணாமல் போனவர்கள் தொடர் பான முறைப்பாடு, தீவுப்பகுதிக்குச் சென்று வருவதற்கான அனுமதி உட்பட பல விடயங்கள் தொடர்பாகப் படைத்தரப்பிடம் பொதுமக்கள் முறைப் பாடுகள் தெரிவித்தனர். பொது மக்க ளின் பிரச்சினைகளை ஏற்றுக் கொண்ட படைத்தரப்பினர் சிலவற்றுக்கு உட னடியாகத் தீர்வையும் கண்டனர்.

வீட்டு வாடகை தொடர்பாக உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தால் வாடகை வழங்கப்படும் என்று படையினரால் தெரிவிக்கப்பட்டது. (க-5)

## பரீட்சை

யாழ்ப்பாணம்,மே22

சிறப்புத் திறமையின் அடிப்படை யில் பதவியுயர்வு வழங்குவதன் மூலம் பொது எழுதுநர் சேவையின் அதி சிறப்பு வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றவுள்ளோ ருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள் ளன. (க-10)

## அஞ்சலிக் கூட்டம்

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் உப அதிபரும் விரிவுரையாளருமான க. குககுமாரராசாவின் 45ஆம் நினை வஞ்சலிக் கூட்டம் நாளை புதன் கிழமை பி.ப. 2.30 மணிக்கு கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை யில் அதிபர் மு.பரஞ்சோதி தலை மையில் நடைபெறவுள்ளது. (க-10)

# வாசகர் திருமுகம்

## ஆங்கில ஆசிரியர் நியமனம்; தாமதமானது ஏன்?

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் வெளியிடப்பட்டிருந்தது. இவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்கள். எனது மகளுக்கு கடிதம் வரவில்லை.

2001.05.11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நேர்முகப் பரீட்சை நடைபெறு வதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றேன். நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு விசாரித்ததில் ஒருவருக்கும் கடிதம் அனுப்பப்பட வில்லையெனத் தெரிந்தது. அனைவரும் கேள்விப்பட்டே வந்துள்ளார்கள், பத்திரிகைகளில் செய்தி படித்தும் வந்தனர்.

பெற்றோல் கொடுக்கிறார்களாம் எனக் கேள்விப்பட்டு போய்க் கியூவில் நின்றது ஞாபகத்திற்கு வந்தது. எந்த ஒரு ஸ்தாபனத்திலும் நேர் முகப்பரீட்சை வைக்கும் போது உரிய கடிதம் அனுப்பப்படும். அந்தக் கடிதத்தில் திகதி, நேரம், சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் ஆகியன குறிப்பிடப்பட்டிருக்கும். இது நடை முறை; விதிமுறையும்கூட.

2000.12.08ஆம் திகதி பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு ஒரு பரீட்சை வைக்கப்பட்டது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 2001.03.10ஆம் திகதி நடைபெற்றது. மூன்று மாதங்கள் எடுத்தன இதுபற்றித் தீர்மானிப்பதற்கு. ஆங்கில ஆசிரியர்கள் இன்றி பல பாடசா லைகள் செயற்பட்டன. சில அதிபர்கள் சமயபாட ஆசிரியர்களை ஆண்டு 3 தொடக்கம் 5 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க விட்டார்கள். கற்றல், கற்பித்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது முதலாம் தவணையின் போது ஆங்கில ஆசிரியர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கத் தவறியது ஏன்?

யாழ்.வலயக் கல்விப் பணியகத்தில் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், பல உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், இவர்களுக்கு மேலாக ஒரு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இருந்தும், சிறப்பாக நிர் வாகம் அமையாதது வியப்புக்கு உரியது.

1987க்கு முன் பிரதேச கல்வித்திணைக்களமாக, கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களின் கல்வித் திணைக்களங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் கல்விப்பணிப்பாளரின் கீழ் இயங்கியது. இந்த நிர்வாகக் கட்டமைப்பு பரவலாக்கப்பட்டு இப்போது 5 வலயங்களாகச் செயற்படுகின் றன. பாடசாலைகள், ஆசிரியர்கள், செயற்பாடுகள் யாவும் ஐந்தில் ஒன்றாகக் குறைந்துள்ளன. இப்படியிருந்தும் ஒரு சிறிய விடயத்தை நடைமுறை விதிகளுக்கு அமைய செயற்படுத்த முடியவில்லை.

யாழ்.கல்வி வலயத்தில் நிலவும் நிர்வாகக் குறைபாடுகளை நீக்க மாகாண அமைச்சு முன்வர வேண்டும்.

- பாதிக்கப்பட்ட பெற்றோர்..

## ஒலியைப் பெருக்குவது பக்தியா?

"அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு" என்று ஒரு பழமொழி உண்டு. எதற்கும் ஓர் அளவு, கணக்கு உண்டு. அதை மீறினால் எதுவும் கெடுதலை தரவே முடியும். இது எமது உடலுக்கும், உள்ளத்துக்கும், சுற்றாடலுக் கும், சமுகத்துக்கும், நாட்டுக்கும் பொருந்தும்.

சைவம் தழைத்தோங்குவது மிகவும் நல்ல விடயம். அத்துடன் அந்தணப் பெரியார்களும் செல்வச் செழிப்புடன் வாழ்வதும் நல்ல விடயம். கோயில்கள் பலவாகப் பெருகி திருவிழாக்களும் உற்சவங் களும் சீரும் சிறப்புமாக நிகழ்வதும் நல்ல விடயம்.

ஆனால்....

இத்திருவிழாக்களும் உற்சவங்களும் அளவுக்கு மீறிச் சென்று மக்களுக்கு தெய்வ பக்தியை உண்டாக்குவதற்குப் பதிலாக தொல்லை கொடுக்கும் நிகழ்வுகளாக மாறிவிட்டன. ஒவ்வொரு கோயிலிலும் ஆறேழு ஒலிபெருக்கிகளை பனையளவு உயரத்துக்குக் கட்டிவிட்டு காலநேரம் பார்க்காமல் ஒலிபெருக்கித்தள்ளுவது பக்திக்குப் பதில் வெறுப்பையே கொடுக்கின்றது.

மக்கள் எல்லோரும் முற்றும் துறந்த துறவிகள் அல்லர். ஒவ்வொ ருவருக்கும் சீவனோபாயத்துக்கான தொழில் உண்டு. மாணவர்கள் படிக்க வேண்டும், அதுவும் புத்தகங்கள் இல்லாமல். வயோதிபர்கள், நோயாளர் கள், வீட்டில் ஆற வேண்டும். அமைதி வேண்டும். பக்தர்கள் கோயிலுக்கு வருவார்கள். கும்பிடுவார்கள். வரமுடியாதவர்கள் கோவில் மணி அடித்த வுடன் கோயில் திக்கைப் பார்த்து கும்பிட்டு அருள் பெறுவார்கள். தயவு செய்து ஒலிபெருக்கிகளை அலறவிட்டு குடிசனங்களுக்கு தொல்லை கொடுக் காதீர்கள். வெறுப்பை உண்டாக்காதீர்கள். கோயில் வளவில் இருப்போருக் காக ஒரு ஸ்டீரியோ ஒலிபெருக்கியை வைத்து ஒலிபெருக்குங்கள். காதுக்கும் இனிமையாக இருக்கும்.

ஊரில் திருடர்கள், வீணர்களின் தொல்லை போதாதென்று இந்த ஒலிபெருக்கித் தொல்லை பெருந்தொல்லை. பக்தியை பெருக்க வேண்டிய நிகழ்வுகளை வெறுப்பை உண்டாக்கும் நிகழ்வுகளாக்காதீர்கள்.

*சுன்னாகம்.* **சிவ பக்தன்.**

## ஆஸ்துமாவை கட்டுப்படுத்த புதிய மருந்து

புதுடில்லி, மே 22

மூச்சுத் திணறலால் அவஸ்தைப்படும் ஆஸ்துமா நோயாளர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கக் கூடிய மூலிகை மருந்து ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கொல்கத்தாவில் உள்ள இந்திய தேசிய உயிரியல் கழகம் இந்த புதிய மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. 5 மூலிகைத் தாவரங்களை ஒன்றிணைத்து இந்த மருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

(ம-6-9)

## இரண்டாம் உலகமகாயுத்த குண்டுகள் மீட்பு

பாரீஸ், மே 22

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது வீசப்பட்ட குண்டுகளில் இரண்டு குண்டுகள் வெடிக்காத நிலையில் பிரான்ஸில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸில் உள்ள ஹோட்டல் ஒன்றின் கூரையின் கீழ் உள்ள பழைய பொருள்களை வைப்பதற்கான அறையில் இருந்தே இக் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. அங்கு மின்சாரத் திருத்தவேலைகளில் ஈடுபட்டோரால் இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டன.

(ம-6-9)

## உறவுகளை நிறுத்துவதற்கு முடிவு

கெய்ரோ, மே 22

இஸ்ரேலுடனான அரசியல்உறவுகளை நிறுத்தி வைக்குமாறு அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கேட்டுள்ளனர்.

மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் பலஸ்தீனர்களுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தும் வரை அந்நாட்டுடனான அரசியல் தொடர்புகளை நிறுத்தி வைக்கும்படி அவர்கள் வலியுறுத்தினர்.

கடந்த வாரம் எகிப்தியத்தலைநகர்கெய்ரோவில் கூடிய அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் மேற்படிகருத்துபரிந்துரை செய்யப்பட்டது.

இதனிடையே, பலஸ்தீனநிலைகள் மீதான தாக்குதல்களை உடனே நிறுத்தும்படி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனிடம் தெரிவித்துள்ளார்.

(ஒ-9)

## சோமாலியாவில் பஸ் விபத்து; 30 பேர் பலி

மொகாடிசு, மே 22

சோமாலியாவில் பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த ஒருவர் வைத்திருந்த வெடிமருந்துப் பொதி தீப்பற்றிக் கொண்டதில் அதில் பயணம் செய்த 30 பயணிகள் தீயில் கருகி மாண்டனர்.

பஸ்ஸின் பெற்றோல் மற்றும் எரிபொருள்கள் ஏற்றப்பட்டிருந்ததாகவும், இதனாலேயே தீ வேகமாக பஸ் முழுவதும் பரவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸில் தீ பரவியதும் ஓட்டுநர் ஜன்னல் வழியாக வெளியே குதித்துத் தப்பிக் கொண்டார். அவருடன் மேலும் 7பயணிகளும் ஜன்னல்கள் வழியாக வெளியேறி உயிர் தப்பி உள்ளனர்.

(ம-6-9)

### சர்வதேச சமூகத்தின் கண்டனத்தின் மத்தியிலும்

# பலஸ்தீனம் மீதான தாக்குதல்கள் தொடரும் என இஸ்ரேல் அறிவிப்பு

ஜெருசலேம், மே 22

சர்வதேச சமூகத்தின் கடும் கண்டனங்களையும் மீறி பலஸ்தீனம் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தப்போவதாக இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இஸ்ரேலிய மக்களைக் காப்பதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்துள்ளார். அவை எவ்வளவு தீவிரமானவையாக இருந்தாலும் அவை குறித்துக் கவலைப்படப் போவதில்லை என்றும் அவர் கூறி உள்ளார்,

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பலஸ்தீனர் ஒருவர் இஸ்ரேலில் நடத்திய தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்தே பலஸ்தீனம் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரமாக்கி உள்ளது.

இந்தத்தாக்குதலில் 19 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது.

இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு உலக நாடுகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன

இதேவேளை —

இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் தாக்குதலுக்கு முன்னர் பேசிப்பதிவு செய்யப்பட்ட வீடியோ கசட்டை ஹமாஸ் இயக்கம் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலியத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 மாத கால குழந்தை இமான் ஹெஜ்ஜோவின் மரணத்துக்குப் பழி வாங்கவே தான் இந்தத் தாக்குதலை நடத்தப் போவதாக மஹ்மூத் அஹமத் மர்பாஷா என்ற அந்த பலஸ்தீனர் தெரிவித்துள்ளார்.

(ம)

### அதிகரித்து வரும் மோதல்களுக்கு மத்தியில்

# வன்முறைகளுக்கு முடிவு கட்ட பலஸ்தீனத்துடன் பேசத் தயார்

### இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு

ஜெருசலேம், மே 22

மத்தியகிழக்கில்தொடர்ந்து வரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கென பலஸ்தீனத் தலைவர் யசிர் அரபாத்துடன் பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர்ஷிமோன் பெரஸ் அறிவித்துள்ளார்.

மேற்குக் கரை, காஸாப் பிரதேசங்களில் அதிகரித்து வரும் மோதல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த் அவர் பலஸ்தீனர்கள் இஸ்ரேலின் எதிரிகள் இல்லை என்றும் கூறினார்.

ரஷ்யாவின் 'மொஸ்கோ ரேடியோ'வுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் ரஷ்யா மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்றும் அப் பேட்டியில் ஷிமோன் பெரஸ் கூறிஉள்ளார்.

இதேவேளை —

பலஸ்தீனர்களுக்கு எதிரான தாக்குதல்களில் எவ் — 16 ரக யுத்த விமானங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று அமெரிக்கா இஸ்ரேலைக் கேட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் துணை அதிபர். —

மத்திய கிழக்கில் நிலைமைகள் மிக மோசமடைந்துள்ளன. இஸ்ரேலும், பலஸ்தீனமும் அழிவுப்பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன — என்றார் —

பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனும், பலஸ்தீன அதிபர் யசிர் அரபாத்தும் விரைவில் சந்தித்துப் பேசுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்றும் அவர் மேலும் சொன்னார். (ம-6-9)

# பிரிட்டிஷ் பிரஜைகளில் நூறில் ஒருவர் ஆசிய, ஆபிரிக்க வழித்தோன்றல்கள்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

லண்டன், மே 22

பிரிட்டனில் வாழும் பிரிட்டிஷ் பிரஜைகளில் நூறில் ஒருவர் ஆசிய அல்லது ஆபிரிக்க நாட்டவர்களின் வழித்தோன்றல்களாக உள்ளனர் என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியரான பிரையன் ஸைக்ஸ் மரபணு (டீ. என். ஏ.) ரீதியாக இந்த ஆய்வை மேற்கொண்டார். 10 ஆயிரம் பேரின் மரபணுக்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டன.

அவற்றில் நூறு பேரின் மரபணுக்கள் ஆபிரிக்க, ஆசிய இனத்தவருடைய தொடர்புகளுடன் காணப்பட்டன.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மரபணுக்களுக்கு உரிய 10 ஆயிரம் பேரும் தாங்கள் பூரணமான பிரிட்டிஷ் வழித்தோன்றல்களே என்று இதுவரை நம்பி இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் வீரர்களாகவும், அடிமைகளாகவும் ரோமானியர்களால் ஆபிரிக்காவில் இருந்து பிரிட்டனுக்குக் கொண்டுவரப்பட்டவர்களே ஆபிரிக்க இன மரபணுவுக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

''நாங்கள் கலப்புக்கு உள்ளாகி இருப்பதுடன் ஒருவருடன் ஒருவர் தொடர்புபட்டவர்களாகவும் உள்ளோம்'' என்று ஆய்வு குறித்து கருத்துத் தெரிவித்த பேராசிரியர் ஸைக்ஸ் தெரிவித்தார்.

''எனவே உயிரியல் அடிப்படையில் தொடர்புபட்டுள்ள நாம் இன ரீதியாக நம்மைப் பாகுபடுத்திப் பார்ப்பது சுத்த அபத்தமாகும்'' என்றும் அவர் கூறினார்.

(ம)

### ஹொங்கொங்கில் பரவிவரும்

# 'பேர்ட்புளூ'வைக் கட்டுப்படுத்த 10 லட்சம் பறவைகள் அழிப்பு

ஹொங்கொங்கில் பறவைகளைப் பாதித்துவரும் 'பேர்ட் புளூ' எனப்படும் ஒருவகைக் காய்ச்சல் மேலும் பரவாமல் தடுப்பதற்காக கோழிகள், வாத்துகள் உட்பட உணவுக்காகப் பயன்படுத்தப்படவிருந்த சுமார் 10 இலட்சம் பறவைகளை கொன்று அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4 ஆண்டுகளின் முன்னர் ஹொங்கொங்கில் கோழிகளைத் தாக்கிய ஒருவகைக் காய்ச்சல், பின்னர் மனிதர்களைத்தாக்கிப் பலர் உயிரிழக்கக் காரணமானது.

இப்போதும் அதேபோன்ற காய்ச்சலே பறவைகளிடேயே பரவியுள்ளதாகவும் — இந்தக் காய்ச்சலை உருவாக்கும்கிருமி மேலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று அஞ்சுவதாலேயே பறவைகள்பூண்டோடு அழிக்கப்படுவதாகவும் — அரசு அறிவித்துள்ளது.

உணவுக்காகப் பறவைகளை வளர்க்கும் பண்ணைகளும், அவற்றை விற்கும் சந்தைகளும் கிருமி நீக்கம் செய்யப்படுகின்றன.

கிருமி மேலும் 'பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளுக்காக 1 கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது

## சதாமின் மகனுக்கு உயர்பதவி

பக்தாத், மே 22

ஈராக்கில்ஆட்சியில்இருக்கும் சதாம் ஹுசெய்னின் பாத் கட்சியினுடைய இராணுவப் பிரிவின் உதவித் தலைவர்களில் ஒருவராக அவரது இளைய மகன் குரே தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-6-9)

## ராஜீவ் நினைவு தினம்

புதுடில்லி, மே 22

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினம் நேற்று நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றைய தினம் பயங்கரவாதத்துக்கு எதிரான தினமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. (ம)

## நாட்டுக்கு நல்ல தலைவர் தேவை

ஜகார்த்தா, மே 22

நாட்டுக்கு பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு நல்ல தலைவர் அவசரமாகத் தேவை என்று இந்தோனேசிய துணை அதிபர் மேகவதி சுகர்ணோபுத்திரி தெரிவித்துள்ளார்.

இராணுவ உயரதிகாரிகள் குழு ஒன்றின் கூட்டத்தில் பேசிய அவர் இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹுமான் வாஹிட்டைத் தாக்கி உரையாற்றினார். (ம)

## பொருளாதாரத்தில் சீனா, இந்தியா முன்னணி

வாஷிங்ரன், மே 22

உலகப் பொருளாதாரத்தில் அடுத்த 25 வருடங்களில் அமெரிக்க, ஐரோப்பிய சக்திகளை மீறி இந்தியாவும் சீனாவும் பெரு வளர்ச்சி அடையும் என்று உலகப் பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ நாவில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். தற்போதைய பொருளாதார நிலை தொடருமானால் உலக அளவில் உற்பத்தியில் அமெரிக்காவை சீனா முந்திவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-6-9)

## குண்டு வெடிப்பில் 14 பேர் பலி

பெர்லின், மே 22

ஜேர்மனியின் ஆயுதச் சந்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 14 பேர் பலியாகினர்; மேலும் 19 பேர் காயமடைந்தனர்

மத்திய ஜேர்மனியில் உள்ள ஆயுதச் சந்தையின் களஞ்சியத்திலிருந்த 'டைனமைற்' குண்டு வெடித்தால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-6-9)

## அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

இஸ்லாமபாத், மே 22

ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தவர்களைத் திருப்பி அனுப்ப அந்த நாடு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது சுமார் ஒரு கோடி ஆப்கானிஸ்தானியர்கள் பாகிஸ்தானில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் 70 சதவீதமானவர்கள் சட்டவிரோதமாகப் பாகிஸ்தானுக்குள் நுழைந்தவர்கள். (ம-6-9)

# நகரில் முஸ்லிம்களின் வீடுகள் சூறையாடப்படுவதற்குக்கண்டனம்

## மாநகர சபைக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

யாழ். நகரிலுள்ள முஸ்லிம்களின் வீடுகளில் இடம்பெறும் திருட்டுகளுக்கு யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பலத்த கண்டனமும் கவலையும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் சபையின் முதல்வர் என். இரவிராஜ் தலைமையில் நேற்று நல்லூரிலுள்ள யாழ் மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி ம. மங்களநேசன் நகரிலுள்ள முஸ்லிம்களின் வீட்டு உடைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார்.

இப் பிரேரணைக்கு ஆதரவாக மேயர் என். இரவிராஜ், ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதி த. சுபத்திரன், புளொட் பிரதிநிதி மு. தவநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்த உரைகளைத் தொடர்ந்து யாழ் முஸ்லிம்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் என்று சபையினால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இத்தத் தீர்மானத்தின் பிரதிகள் யாழ் அரசாங்க அதிபர், 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மற்றும் யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### பல்கலைக்கழக சமூகத்தின் முயற்சிக்கு ஆதரவு

சட்ட விரோத மதுபான விற்பனை — உற்பத்தி நடவடிக்கைகளுக்கு எதிராக யாழ் பல்கலைக்கழகசமூகத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு யாழ். மாநகர சபையும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று புளொட் உறுப்பினர் மு. தவநாதன் முன்னறிவித்தல் கொடுத்த பிரேரணை தொடர்பாக மேயரினால சபைக்குத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரேரணை தொடர்பாக ஈ பி ஆர் எல். எவ் பிரதிநிதி த சுபத்திரன் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

பல்கலைக்கழகச் சமூகம் யாழ்ப்பாணத்தில நடைபெறும ஜனநாயக மறுப்புகளையோ, ஜனநாயக மீறல்களையோ, கண்டிப்பதில்லை

சில விடயங்களுக்காக மட்டும — ஒருபக்கச் சார்பாக மட்டுமே — பல்கலைக்கழகச் சமூகம் குரல் கொடுத்து வருகிறது.

யாழ் மாநகர சபையில இரு மேயர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், இந்தகொலைகளை பல்கலைக்கழக சமூகம் கண்டிக்கவில்லை

வன்முறை, ரீதியிலான செயற்பாடுகளுக்கு சபை ஒரு போதும் ஆதரவு வழங்க முடியாது. ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளுக்கு நாம் என்றும் ஆதரவு வழங்குவோம், பல்கலைக்கழக சமூகம் ஜனநாயக நிறுவனங்களையும் தமது செயற்பாடுகளுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்—என்று கூறினார்.

சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் உற்பத்திகளைத் தடுக்கும் யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் யாழ். மாநகர சபை ஆதரவு வழங்குவது என்றும்—

இது போன்ற செயற்பாடுகளின் போது மாநகர சபை போன்ற ஜனநாயக அமைப்புகளுக்கு பல்கலைக்கழக சமூகம் மதிப்பளிக்க வேண்டும் என்று கோருவது என்றும்—

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். மாநகர சபையின் புதிய ஆணையாளர் இ. இராமலிங்கம் உட்பட சபையிலுள்ள பதவிநிலை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### மேயர் உரை

இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்து முதல்வர் என் இரவிராஜ் தனது தலைமையுரையின் போது கூறியதாவது:-

யாழ். மாநகர சபையின் பதில் ஆணையாளர் இராசா தணிகாசலத்தின் திடீர் இடமாற்றம் மாகாண சபையின் எதேச்சதிகாரமான செயலாகும்.

இந்த இடமாற்றம் தொடர்பாக எம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட சுகாதார ஊழியர் என்ற பெயரில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில் ஆணையாளர் தணிகாசலம் எவராலும் எந்த விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை விசாரணைகளின் அடிப்படையில் அவர் மாற்றம் செய்யப்படவில்லை.

### பத்திரிகைகளில் தவறான செய்தி

பத்திரிகையில் கூறப்பட்டது போல சுகாதார சீரழிவுகளோ சிசு மரணங்களோ எதுவும் நிகழவில்லை

குடும்பநல உதவியாளர்கள் என்னை வந்து சந்தித்தார்கள் நான் வேலைக்கு சமூகமளிக்குமாறு அவர்களிடம் கேட்டேன்.

முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரியை வேலைக்கு சேர்க்குமாறு அவர்கள் என்னிடம் கேட்டார்கள் நான் முதல்வராக இருக்கும் வரை அவருக்கு இங்கே வேலை வழங்கப்போவதில்லை. அவ்வளவு தூரத்துக்கு மேயர் என்ற வகையில் என்னையும் கௌரவ உறுப்பினர்களையும் சபை நடவடிக்கைகளையும் அவர் அவமதித்துள்ளார்.

குடும்ப நல உதவியாளர்களும் சிலரும் சேர்ந்து மாநகர சபையின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை சட்டவிரோதமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### திடுக்கிடும் தகவல்கள்

யுனிசெப் நிறுவனத்துக்கு நாம் அண்மையில் விஜயம் செய்த போது பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன:

இரும்புத் திரைக்குப் பின்னால் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இருந்துள்ளது — புத்தக வெளியீட்டிற்காக ஒரு லட்சம் ரூபா மேற்படி நிறுவனத்திடம் பெறப்பட்டுள்ளது. அதற்கான கணக்கு விவரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

கடந்த மார்ச் மாதம் மருத்துவ உபகரணங்கள் உட்பட 8 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் ஒரு வருடத்துக்கு மேலாகக் கொழும்பில் வைக்கப்பட்டிருப்பது தற்பொழுதுதான் எமக்குத் தெரியவந்துள்ளது.

### அம்புலன்ஸ் சேவை

சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட அம்புலன்ஸ் தற்பொழுது 24 மணி நேர சேவையில் ஈடுபட்டு வருகிறது.

அம்புலன்ஸ் தேவைப்படுபவர்கள் 3556 இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் — என்றார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மாநகர சபைக் கீதம் ஒலிப்பேழையில்ஒலிபரப்பப்பட்டது

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் மாநகர சபைக் கீதம் ஒலிபரப்பப்பட்டபோது எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். (உ-5)

# காணி உறுதிகள் விநியோகம்

பளைப் பிரதேசத்தில் இத்தாவில், மாசார் ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் குடியேற்றக் காணியில் குடியமர்ந்துள்ளவர்களில் 20 பேருக்கு, சுவர்ணபூமித் திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

புலோலியில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவையில் வைத்து கிளிநொச்சி அ. அதிபர் இ. ஐயாத்துரை இந்த உறுதிகளை வழங்கினார்.

இதேவேளை —

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நியமனக் கடிதங்களும் அங்கு வைத்து வழங்கப்பட்டன. (உ-3-117)

# காணவில்லை

கோப்பாய் மற்றும் புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த இருவரைக் காணவில்லை என்று அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில முறைப்பாடு செய்துள்ளனர்.

சித்த சுவாதீனமற்றவரான நவரத்தினம் நிரஞ்சன் (வயது 29 — சிவன் கோயிலடி., புத்தூர்) என்பவர் கடந்த 14 ஆம் திகதி மட்டுவிலில் உள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சென்று இருந்தார் என்றும்—

அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும்—

அவரது உறவினர்கள் முறைபபாடு செய்துள்ளனர்.

கோபபாய், பழம் வீதியை சேர்ந்த கந்தசாமி ஸ்ரீதரன் என்பவரே கடந்த 5ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரது உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

(உ-3-10)


## கலந்துரையாடல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்கள் யாழ் கூட்டுறவு அலுவலகத்தைச் சேர்ந்த கூ. சங்கப் பரிசோதகர்களை நாளை (2001—05—23) புதன்கிழமை காலை 10 00 மணிக்கு எமது அலுவலகத்தில சந்திக்க உள்ளார். சகல கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்களும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

கூ அ.உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

857, கே கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (சி/16795)


## அத்தியடிச் சம்பவம்;

# மேலும் எட்டு மாணவர்களை கைது செய்யுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 22

அத்தியடிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக மேலும் 8 மாணவர்களைக் கைது செய்து இன்று நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு நீதிவான் இ. த. விக்னராஜா பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவன் வழங்கிய தகவல்களை அடுத்தே மேலும் எண்மரைக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை —

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தவேளையில் பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட அதே கல்லூரியைச்சேர்ந்த மற்றொரு மாணவன் நீதிவான்முன்னிலையில்ஆஜர்செய்யப்பட்டபோது அவரை 15 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்ததுடன், நாளை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

யாழ் நகரில் உள்ள மேற்படி பிரபல கல்லூரியைச் சேர்ந்த ஐந்து மாணவர்களையும், நகரில் உள்ள வேறு மூன்று கல்லூரியைச் சேர்ந்த ஒவ்வொரு மாணவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் படியே தற்போது உத்தரவு பிறப்பிக்கப்

(14 ஆம் பக்கம் பார்க்க)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி அழகரத்தினம் சின்னம்மா

கல்வியங்காடு. இல. 64, புதுச்செம்மணி வீதியைச் சேர்ந்த திருமதி அழகரத்தினம் சின்னம்மா நேற்று (21-05 2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா அழகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம், தங்கராசா, இராசதுரை, இராசமணி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பூபாலசிங்கம், துரைராஜசிங்கம் (டினேஷ் அச்சகம், கலவியங்காடு), இராஜேஸ்வரி, காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் கோபாலசிங்கம் (கோபால் சைக்கிள் சென்ரர், கல்வியங்காடு), ஜெயசிங்கம் (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சரோஜினி மற்றும் பாக்கியம், பூபதி (யாழ் போதனா வைத்தியசாலை), ஜெயமனோகரன் (உதயன் பணிமனை), சாந்தரூபி, சாந்தினி (வடமராட்சி இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியும், ராதிகா, றேனுகா, ஜெபவதனி, ஜெபசீலன், பவானி, டினேஷ்காந்த், சயந்தினி, சுரேந்தினி, சங்கீதா, சதீஸ்குமார், மயிதா பாவுதன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு 64, புதிய செம்மணி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மா. ஜெயமனோகரன்
(மருமகன்)

64, புதிய செம்மணி வீதி.
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (88067)

## திருமதி நல்லையா மனோன்மணி

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா மனோன்மணி நேற்று (21-05-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்புச்சாமி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் கனகரட்ணம் கனகேஸ்வரி (றதி வோச் வேக்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நா. செல்வநாயகம் (முன்னாள் தலைமை ஆசிரியர், யா/வைத்திலிங்க வித்தியாசாலை, ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற ம. நடராசா (உரிமையாளர், றதி வோச் வேக்ஸ்), திருமதி கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் செ. சற்குணாநந்தன் (உரிமையாளர், வீனஸ் டில்கா) திருமதி ப. சற்குணராணி (லண்டன்) செ. தயாபரன் (லண்டன்) செ கிருபானந்தன் (கனடா), திருமதி K. நந்தினி (பரிஸ்), செ. மனோகரன். திருமதி சி. இராசறதி (லண்டன்), ந. இராஜகுலசிங்கம் (உரிமையாளர், ஸ்ரான்லி பேணிசிங் மார்ட்), ந இராஜகுலேந்திரன் (றதி வோச் வேக்ஸ்), திருமதி ப. இராஜறஜனி (சுவிஸ்), ந. இராஜசேகரன் (கனடா), ந. இராஜஸ்ரீதரன் (லண்டன்), ந. இராஜசீலன் (லண்டன்), சி. கமலசேகரம் (சில்லாலை) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் கனகரஞ்சன் (கனடா), க. கனகபாலன் (கனடா) திருமதி சீ. கனகரஞ்சினி திருமதி கனகரமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-5-2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சற்குணாநந்தன்
(மகன் - உரிமையாளர் வீனஸ் டில்கா)

பிறவுண் வீதி,
இல. 6, 2 ஆம் ஒழுங்கை,
நீராவியடி. (88082)

# சமாதான முயற்சி தோற்றால் புலிகளை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை!

## விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே22

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் எவையும் வெற்றியளிக்காத பட்சத்தில் முழுக்க முழுக்க தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியே இல்லை.

எந்த அரசாங்கமும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஒரு தீர்வைக் கொண்டுவர முற்பட்டால் அல்லது முன்வைக்க விரும்பினால் அது தொடர்பாகப் புலிகளுடன் கலந்தாலோசித்த பிறகுதான் வெளியிட வேண்டும்.

அவர்கள்தான் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை தமிழ் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்காக நான் புலி என்று கூறவில்லை.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சனியன்று பிற்பகல் 3.30 மணியளவில் அவரது கொக்குவில் வாசஸ்தலத்தில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றுபட்டு, நின்று எமது பலத்தை அதிகரித்துக் கொண்டு தற்போதைய அரசாங்கம் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதுதான் இன்றைய அவசர தேவை.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடியுள்ளன என்ற ஒரு மன நிலை சர்வதேச ரீதியில் தோன்றியுள்ளது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முன் நிபந்தனையாக முன்வைத்துள்ள மூன்று கோரிக்கைகளையும் அரசாங்கம் ஏற்றுப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் என்ன பிரச்சினை?

இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்துமே இனப்பிரச்சினை விடயத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தினால் மட்டுமே நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று வலியுறுத்தி வருகின்றன.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விரும்பாத அரசாங்கம் புலிகளை நம்பமுடியாது என்று கூறி வருகிறது. இந்த நிலையில் நாம் எப்படி அரசாங்கத்தை நம்புவது? இதுவரை காலமும் தமிழர்களுக்கு பாதுகாப்பான இடமாக யாழ்பபாணம் இருந்தது. அந்தநிலை கூட தற்போது மாறிவிட்டது. இங்கும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

இந்த நிலைமைக்கு இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டுவரும் கூலிப்படைகளுக்கு முக்கிய பங்கு உள்ளது. அரசாங்கத்திடம் வாங்கிச் சாப்பிடுபவர்கள் தமிழர்களைப் பாதுகாக்க முடியுமா? ஆனால் பாதுகாக்கிறோம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று கூறுபவர்களால் வடக்கு - கிழக்கு இணைந்த - போதிய அதிகாரங்களைக் கொண்ட - மாநில சுயாட்சியை ஏற்படுத்த முடியுமா?

அவ்வாறு அவர்களால் மாநிலத்தில் சுயாட்சியை ஏற்படுத்த முடிந்தால் அதனை ஏற்று அவர்களுக்கு நாம் ஆதரவு வழங்கத்தயார். ஆனால் அவர்களால் அது முடியாத காரியம்.

ஏனெனில் புலிகள் கூட இதனைத்தானே கேட்கின்றார்கள். இதற்கு இணங்காத அரசு இவர்கள் கூறுவதற்கு மட்டும் இணங்குமா?

தமிழர்களை ஏமாற்றுவதற்காக அரசாங்கம் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையிலேயே தடை செய்யப்படாத பொருள்களுக்குத் தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நல்லெண்ண அடிப்படையில் 10 பேரை விடுதலை செய்வதாக அரசாங்கம் அறிவித்தது. அவர்களில் ஒருவருக்குக் கூட புலிகளுடன் தொடர்பு இருக்குமா என்பது சந்தேகம். அவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றம் விடுதலை செய்துள்ளமை அதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை -

தென்பகுதிச் சிறைகளில் 2,500க்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கந்தசாமி லிங்கேஸ்வரன் என்ற கொழும்புத்துறை இளைஞர் ஒருவர் 1993 ஆம் ஆண்டில் இருந்து விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அரசாங்கத்தால் தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 'அக்கினிச்சுவாலை' இராணுவ நடவடிக்கை வெற்றியளித்திருந்தால் எமது நிலை என்ன?

இந்த இராணுவ நடவடிக்கை யாரை அழிக்க, எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? இவற்றையெல்லாம் சிந்திக்காது அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நாம் எதிர்க்கலாமா?

10 தமிழ்க்கட்சிகளும் ஒன்றாக கூட்டிணைந்தே அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிப்பது என்று தீர்மானித்திருந்தோம்.

### மதில்மேல் பூனையாக கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணி அவசரமாகக் கூடி தனது முடிவை திடீரென மாற்றிக் கொண்டுள்ளது. அவர்கள் எப்பொழுதும் மதில் மேல் பூனையாகவே இருக்க விரும்புகிறார்கள்.

அவர்கள் அரசியலில் அதிக அனுபவம் உள்ளவர்கள் என்றால் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக என்ன முடிவு எடுத்துள்ளார்கள் என்பதைத் தெளிவு படுத்தலாம் தானே?

எந்த ஒரு தமிழ் மகனுக்கும் இதனைக் கேட்பதற்கு உரிமை உண்டு. இதற்கு அவர்கள் உறுதியான முடிவை வெளியிடட்டும் - என்று விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

### குடிசன மதிப்பீடு இப்போது வேண்டாம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிசன மதிப்பீட்டு நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக நிறுத்த அனைத்து தமிழ் எம்.பிக்களும் ஒன்றுபட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

வலி.வடக்கிலும் தென்மராட்சியிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் வாழ்ந்த தமிழர்களை அகதிகளாக வெளியேற்றிவிட்டு எவ்வாறு குடிசன மதிப்பீட்டை நடத்தலாம்?

இதன்மூலம் தமிழர்களின் உரிமைகளைப் பறித்து எம்மை மூன்றாவது இனமாக மாற்றுவதற்கே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனவே தமிழர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதித்த பிறகே குடிசன மதிப்பீட்டை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் - அவர் வலியுறுத்தி கூறினார்.

(ஐ-6-4)



யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் மல்லாகம் ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மே தின நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையுரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (ஐ-

## விவசாய உபகரணங்கள் அன்பளிப்பு

வலி.வடக்கு,மே22

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள 70 குடும்பங்களுக்கு பட்டினிக்கெதிரான இயக்கம் இரண்டாம் கட்டமாக வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உபகரணங்கள், விதைகள் என்பனவற்றை வழங்கவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொக்குவில் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து இவை விநியோகம் செய்யப்படவுள்ளன. உரிய பயனாளிகள் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இந்த உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## சிறைக்காவலர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,மே22

நூற்றுக்கும் அதிகமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். சிறைச்சாலையில், பாதுகாப்புக் காவலர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார். யாழ். சிறைச்சாலையில் உள்ள ஆண் கைதிகளைக் கவனிப்பதற்கு மேலும் 35 ஆண் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றனர் என்றும் பெண் கைதிகளைக் கவனிப்பதற்கு மேலும் 10 பெண் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவை தவிர இரண்டு மருந்தாளர்களுக்கான வெற்றிடமும் இரண்டு ஆண் தாதிகளுக்கான வெற்றிடமும் மூன்று வாகன சாரதிகளுக்குமான வெற்றிடமும் நிரப்பப்படாமல் உள்ளன என்றும் -

இவற்றைக் கவனத்தில் எடுத்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். (க-1-4)

## புதிய வகுப்பறைக் கட்டடம்

காரைநகர்,மே2.

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் தரம் 3,4இற்கான புதிய வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் அமைப்பதற்காக 75 ஆயிரம் ரூபா நிதியை தவக கல்வித் திணைக்கள அலுவலகம் ஒதுக்கியிருந்ததாக அதிபர் அ.குமரேசமூர்த்தி தெரிவித்தார். (க-73)

## சுகாதார வாரத்தை முன்னிட்டு குடாநாட்டில் சிரமதான நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே22

தேசிய சுகாதார வாரம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அனுட்டிக்கப்படவுள்ளது. சுகாதார வாரத்தில் குடாநாட்டிலுள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், சமூக மட்டங்களில் பல சிரமதான நிகழ்வுகளுக்கு ஏற்பாடாகியுள்ளது.

இவ்வருடம் தேசிய சுகாதார வாரத்தின் பிரதான தொனிப் பொருளாக "நல் வாழ்க்கையைப் பேணுவதற்கு தொற்று நோய்களைத் தடுப்போம்" என்ற விடயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நுளம்பினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல் இத்தொனிப் பொருளின் பிரதான இடத்தைப் பெறும். மேலும் தொற்றாத் தன்மையுடைய நோய்களையும் திடீர் விபத்துகளையும் தடுக்க வேண்டியதன் அவசியமும் துணைத்தொனிப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட தேசிய சுகாதார வாரம் பற்றிய சுற்று நிருபம் கடந்த வாரம் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்று நிருபத்தில்; எமது நாட்டில் சுகாதாரப் பிரச்சினைகளாக இருந்து வருகின்ற நுளம்பினால் பரவி வரும் டெங்கு, மலேரியா, யானைக் கால், ஜப்பான் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை ஒழிப்பது சம்பந்தமாக மக்கள் மத்தியில் மனப்பான்மையையும், விழிப்புணர்வையும், பழக்க வழக்கங்களையும் மேம்படுத்தல் இச் சுகாதார வாரத்தின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு நவாலி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை சுகாதாரக் கருத்தரங்கு இடம்பெறும். (க-135-185)

## பண்பாட்டையும் வனப்பையும் காக்க 'தொண்டர் அமைப்பு' உடனடித்தேவை

**பேராயர் எஸ்.ஜெபநேசன்**
*தென்னிந்திய திருச்சபை அத்தியட்சகர்*

"சந்ததியின் துரோகிகள்" என மகுடமிட்டு ஓர் அருமையான ஆசிரியத் தலையங்கத்தை நேற்று (20-05-2001 இல்) எழுதியிருந்தீர்கள்.

மரங்களை ஈவு இரக்கமின்றித் தறிப்பவர்கள் மட்டுமன்றி, கசிப்பு உற்பத்தி செய்பவர்கள், ஆபாசப் படங்களைக் காட்டுபவர்கள், வீடுகளின் பாகங்களைக் கழற்றி விற்பவர்கள் எல்லோரும் பெருகிவரும் நாடாக நமது பிரதேசம் மாறிவருகிறது. நாட்டின் சூழலினால் இத்தகைய சீர்கேடுகள் பெருகிவருகின்றன.

ஒரு காலத்தில் ஒரு வேலியைச் சுற்றி இன்னொரு வேலியடைத்து தமது பெண்களை மிகுந்த கவனமாகப் பெற்றோர் வளர்த்தனர். இன்று அகதி முகாம்களில் பொதுக் கிணறுகளில் பெண்கள் குளிக்க வேண்டிய கட்டாயம். நமது சமுதாயத்தின் விழுமியங்கள் திட்டமிடப்பட்டு சீரழிக்கப்படுகின்றன. பனைமரங்கள் காப்பாற்றப்படல் வேண்டும் என்று அயராது பாடுபட்டார் 'மில்க்வைற்' கனகராஜா. இன்று ஆயிரக் கணக்கான பனைகளும் தென்னைகளும் வெட்டி வீழ்த்தப்படுகின்றன.

யாழ்ப்பாணம், பண்பாளர் வாழ முடியாத பிரதேசமாக்கப்பட்டு வருகின்றது. இது பெரும்பான்மைச் சமூகத்தினால் நன்கு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுவரும் சூழ்ச்சி என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். போக்குவரத்துச் சிரமங்களினாலும், உயர்ந்த வைத்தியச்சேவையின் பற்றாக்குறையினாலும் மக்கள் நாளாந்தம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மெல்ல மெல்ல வனாந்தரமாக மாறிக்கொண்டு வருவதனைக் கண்டு நாம் கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியுமா?

*"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி*
*இருந்தது மிந்நாடே - அதன்*
*முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து*
*முடிந்தது மிந்நாடே - அவர்*
*சிந்தைய ராயிர மெண்ணம் வளர்ந்து*
*சிறந்தது மிந் நாடே"*

பிரச்சினைகள் தோன்றிய பொழுது யாழ்ப்பாணத்தில் உயர்ந்த தலைவர்கள் தோன்றி பிரதேசத்தின் சமய, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைக் காப்பாற்றினார்கள். இன்றோ அழிந்துபோகிறோம். நம்மைக் காப்பாற்றுபவர் யாருமில்லையா என்ற குமுற வேண்டியிருக்கின்றது.

இந்தச் சூழலில் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்ற ஓர் அமைப்பு உருவாக வேண்டும். ஒரு காலகட்டத்தில் இந்தியாவில் 'இந்தியாவின் தொண்டர்கள் சங்கம்' (SERVANTS OF INDIA SOCIETY) என்ற அமைப்புத் தோன்றியது. எமது நாட்டிலும் யாழ்ப்பாணத்தின் தொண்டர் அமைப்பு ஒன்று (SERVANTS OF JAFFNA SOCIETY) தோன்ற வேண்டும்.

மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள தலைவர்களான நல்லை ஆதீனம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி முதலியோர் இதன் தலைமையை ஏற்கவேண்டும். ஏனையவர்கள் தாமாக முன்வந்து ஒத்துழைப்பு நல்குவார்கள். மக்கள் உள்ளத்தில் நாட்டுப்பற்றையும் நல் அறங்களையும் போதிக்க வேண்டும். கிராமம் கிராமமாக, ஊர்ஊராகச் சென்று மக்கள் உள்ளங்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். நாட்டைச் சூறையாடுபவர்களையும் சீர்கெடுப்பவர்களையும் வழிக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.




இன்னும் காலம் தாழ்ந்து விடவில்லை.

வருங்காலச் சந்ததிக்கு யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் இயற்கை வனப்பையும் காப்பாற்றிக் கொடுப்பது எமது தார்மீகக் கடமையாகும். ☆

### விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில்

# குடாநாட்டில் 964 குளங்களை புனரமைக்க நடவடிக்கை

வலி.தெற்கு,மே22

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இம்மாவட்டத்திலுள்ள 964 குளங்கள் இவ்வருடம் புனரமைபபுச் செய்யப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது.

அரச சார்பற்ற பல நிறுவனங்கள் இவற்றை மேற்கொள்ள உள்ளன.

கெயர் ஸ்தாபனம், பட்டினிக்கெதிரான நிறுவனம், போறுட், உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடனும் மாகாண சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியில் இருந்தும் இக்குளங்கள் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

விவசாய உற்பத்தியை ஊக்குவித்து சிறுபோக, பெரும்போக பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுவதற்கு வசதியாக இக்குளங்கள் யாவும் புனரமைப்புச் செய்யப்பட உள்ளன.

(க-152)

# சேக்கிழார் குருபூசைப் பெருவிழா

யாழ்ப்பாணம், மே22

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சேக்கிழார் சுவாமிகளின் குருபூசைத் தினத்தை பெருவிழாவாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை 7.30 மணியளவில் நல்லை ஆதீனத்தில் பூசையுடன் சேக்கிழார் சுவாமிகள் எழுந்தருளி வீதி உலா நடைபெற்று விழா மண்டபமான கச்சேரி - நல்லூர் வீதி ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தை அடையும். அங்கு பூசை, தேவாரப் பண்ணிசைக் கச்சேரி, சொற்பொழிவு, புராண படனம், இசை உரை அரங்கு, மகேசுர பூசை ஆகிய நிகழ்வுகள் காலை முதல் மாலை வரை நடைபெறும். (க)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விப் பணிப்பாளர்

திரு.வீ.இராசையா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மீனாட்சி வீரகத்தி**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.

(88057)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்புடையீர்!

கடந்த 13.05.2001 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த சாவகச்சேரி கற்குழி கந்தசுவாமி கோயில் பிரதம அர்ச்சகர்

**பிரம்மஸ்ரீ ச.இராஜேஸ்வர சர்மா** அவர்களின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நாளை மறுதினம் (24.05.2001) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

* *இதனை யாவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

திருமதி யோ.இராஜேஸ்வர சர்மாவும்,
மக்களும், மருமக்களும்.

*சிவன் கோயில் தெற்கு வீதி,*
*சித்தன்கேணி.*

(88044)

## இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவுகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 12 |
| - | - |
| 06 | 06 |
| - | - |
| 1949 | 1999 |

### அமரர் துரைராஜா தேவராஜா

(தேவா)

(தபாற்கந்தோர் - சங்கானை)

திதி : 22-05-2001

மழலை மொழி பயின்று உம்மை
அம்மப்பா என்று சொல்லி
ஆசையாக அழைக்கும் முன்பே
காலன் அவன் கவர்ந்ததேனோ?
ஆண்டு இரண்டு போயிடினும்
ஆறவில்லை நம் துயரம்
நிரில் மறையவில்லை - எம்
இதயமதில் வாழுகிறீர்!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்புப் பேரன்
ஜெ.நிறோஜன்

*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*சங்கானை.*

(C/16751)

### கூட்டுப்படைத் தளபதியாக நீல் டயஸ்?

கொழும்பு,மே22

கூட்டுப்படைகளின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்தையின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது. அவரது சேவைக் காலம் நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேவை நீடிப்பு வழங்கப்படாவிட்டால் அப்பதவிக்கு அண்மையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் நீல் டயஸ் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

### வீதியின் ஒரு பகுதி திருத்தப்படவில்லை

கோப்பாய்,மே22

கோப்பாய் பிரதேச சபை உப அலுவலகத்திற்கு முன்பாக இருந்து மானிப்பாய் வீதி வரை செல்லும் வீதி கடந்த சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் தார் இடப்பட்டுப் புனரமைக்கப்பட்டது. ஆனால் அவ் வீதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட செப்பனிடும் வேலைகள் குறிப்பிட்ட தூரத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன. செப்பனிடப்படாத எஞ்சிய பகுதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலேயே தொடர்ந்தும் உள்ளது. (ஜ-72)

### பற்சிகிச்சை 6 நாள்கள் நடைபெறும்

கோப்பாய்,மே22

கோப்பாய் அரசினர் மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெற்றுவந்த பற்சிகிச்சைப் பிரிவு நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் வாரத்தில் ஞாயிறு தவிர்ந்த 6 நாள்களும் தொடர்ந்து நடைபெறும் என கோப்பாய் அரசினர் மருத்துவமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ஜ-72)

### வெள்ளி விழா ஏற்பாடு

வலி.வடக்கு,மே22

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

சங்கத்துடன் நீண்ட காலத் தொடர்புகளைப் பேணி வரும் அங்கத்தவர்கள் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஜ-86)

### நாளை காங்கேசன் செல்கிறார்

யாழ்ப்பாணம்,மே22

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார். (க-10)

### 'சிஹல உறுமய' எம்.பியாக சம்பிக்க இன்று பதவியேற்பு

கொழும்பு,மே22

'சிஹல உறுமய' தேசிய அமைப்பாளராக சம்பிக்க ரணவக்க இன்று செவ்வாய்க்கிழமை புதிய எம்.பியாக நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யவிருக்கிறார்.

திலக் கருணாரத்ன எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்ததையடுத்து இவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் (க)

### மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட நிலை மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் பிற்பகல் 1.30 மணி தொடக்கமும் -

26ஆம் திகதி காலை 8.00 மணி தொடக்கமும் -

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. (உ-3)


**புறொயிலர் விற்பனைக்கு**

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **செல்வம், மங்கள மாளிகை.**

மாயக்கை,
கால்நடை தீவன
விற்பனை நிலையம்,
பஸ்நிலையம்,
(88022) பருத்தித்துறை.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 25 | 22 |
| - | - |
| 02 | 04 |
| - | - |
| 1955 | 2001 |

### செல்வி பொன்னையா செல்வமலர்

செல்வ மலராள் சென்றாள் பரமன்தாள்
செல்வ விஷு சித்திரையில் - செல்வ
அமாவாசை தான் சிறந்து விளங்க
அவமில் லாது போற்று.

குடும்பத்தினர்.
நாவற்குழி,
கைதடி.

தற்காலிக முகவரி:-
*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

(88056)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 22 |
| - | - |
| 02 | 04 |
| - | - |
| 1924 | 2001 |

### அமரர் வயிரமுத்து கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர், மாவிட்டபுரம்.)

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட
எமது அன்புத் தெய்வத்துக்கு
எமது இதய அஞ்சலி!

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

பாசமிகு -
- குடும்பத்தினர்.

*பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(C/16767)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் கையில் |
|---|---|
| 18 | 22 |
| - | - |
| 03 | 04 |
| - | - |
| 1940 | 2001 |

திருமதி

### சிவபூஷணம் அருமைநாயகம்

(பேபி ரீச்சர்)

முப்பத்தொரு நாள் நினைவுகள் நெஞ்சைத்
தொட்டு வாட்டுதம்மா!
கண்மூடி முழிப்பதற்குள் - எல்லாம்
முடிந்து விட்டதம்மா!
பொங்கி வரும் சோகங்கள்
அலைமோதிப் போகுதம்மா!
நல்லாசிரியராய் இருந்து - நன் மாணவரை
உருவாக்கி விட்டீரம்மா!
எமக்கு 'அம்மா' என்றுரைக்க
யாரம்மா இப்போ .........?

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:-
*டச்சு வீதி,*
*சாவகச்சேரி.*

(88020)

உ

**அச்சுவேலி பத்தமேனி**

**அருள்மிகு தீர்த்தாங்குளம் பிள்ளையார் தேவஸ்தானம்**

# தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம் - 2001

விநாயகர் அடியார்களே!

நிகழும் விஷு வருடம் வைகாசி மாதம் 8 ஆம் நாள் இன்று (22-05-2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் தீர்த்தாங் குளப் பிள்ளையாருக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் தீர்த்தோற்சவத்திற்கு வருகை தந்து எம் பெருமானிடம் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

*10ஆம் திருவிழா உபயகாரர்கள் சார்பில்*

*அச்சுவேலி.* (88072) திரு.செ.சந்திரமூர்த்தி.


---

உ

## வரலாற்றுச் சிறப்பு மிக்க இணுவை ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி ஆலயத்தில்

# இன்று தீர்த்தோற்சவம்

## பக்தர்க்கருளும் பரமதயாளன்



இந்த ஆலயம் யாழ்ப்பாண நகரில் காங்கேசன்துறை வீதியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய இணுவில் கிராமத்தின் மத்தியில் யாவரும் வழிபடுவதற்குரிய சிவத்தலமாக அமையப் பெற்றுள்ளது. இச்சிவாலயம் இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்னர் குருபூசை மடமாக ஸ்தாபிக்கப்பட்டது. இம்மடத்தில் சைவ வேளாண் குலத்திலகராகிய 'சைவச் சின்னப்பிள்ளை' என அழைக்கப்படும் சின்னத்தம்பி அவர்கள் சிவபூசை செய்து வந்தார்.

**லிங்கப்பிரதிஷ்டை**

இந்த மடத்தில் குரு பூசைகளும் சமய நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன. சின்னத்தம்பி அவர்கள் இந்தியாவில் உள்ள காசிக்குத் தல யாத்திரையை மேற்கொண்டு, காசியில் கங்கா நதியில் ஸ்நானம் செய்தபோது பாணலிங்கம் ஒன்று கிடைத்தது. அந்த இலிங்கத்தைக் கொண்டு வந்து இம்மடத்தில் 1912 ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

அப்போது கர்ப்பக்கிரகத்தில் அம்பாளும் ஸ்தாபிக்கப்பட்டு கர்ப்பக்கிரகத்துக்கு நான்கு பக்கமும் வாசல் விடப்பட்டு ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமிகள் மடாலயமாக விளங்கியது; தற்போது மக்கள் மத்தியில் வழிபடுவதற்குரிய சிவத்தலமாக விளங்குகின்றது.

**அழகு மிக்க அருளாலயம்**

இவரின் பின் இவரது மகன் பராமரிக்கும் காலத்தில் 1927 ஆம் ஆண்டு ஸ்ரீ விசாலாட்சி அம்பாளுக்கு வேறாக கர்ப்பக்கிரகமும் அமைக்கப்பட்டு அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டு அழகு மிக்க அருளாலயமாக மிளிர்ந்தது.

இதன் பின் இவரின் மகன் பராமரிக்கும் காலத்தில் 1958 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரம் கட்டப்பட்டு அசையா மணியும் அமைக்கப்பட்டது. இவரின் காலத்தில் மீண்டும் 1977 ஆம் ஆண்டு தை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் செய்யப்பட்டு 1978 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**மங்களகரமான மகாகும்பாபிஷேகம்**

இதற்குப் பின் பரம்பரையாக தற்போது இவரின் மகனான சீவரத்தினம் - பரமேஸ்வரன் அவர்களின் பராமரிப்பின் போது 1997 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், அர்த்த மண்டபம் என்பன புனரமைக்கப்பட்டு வசந்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம் என்பன புதிதாக அமைக்கப்பட்டு 1998ஆம் ஆண்டு சித்திரை மாதம் சிவஸ்ரீ. தாறு. வாசுதேவக்குருக்களால் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இத்தினத்தை முன்னிட்டு எம்பெருமானுக்கு வைகாசி அமாவாசையை தீர்த்த உற்சவமாகக்கொண்டு பதினைந்து தினங்கள் அலங்காரத் திருவிழாவும் ஆவணிப் பௌர்ணமியைத் தீர்த்த உற்சவமாகக்கொண்டு பத்துத் தினங்கள் அம்பாளுக்கும் திருவிழா நடைபெறுகின்றது.

இந்த ஆண்டும் இவ்வாறே எம்பெருமானின் திருவிழா நடைபெற்று இன்று அருள் மயமான தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. இக்காலத்தில் தினமும் மாலை 6 மணிக்கு ஆசிரியமணி திரு. ஸ்ரீ தயாளனின் சொற்பொழிவும் இடம்பெறுகின்றது. எம்பெருமான் இன்று தனது அருள்பிரவாகத்தை அள்ளி வழங்கி பக்தருக்கருளும் பரம தயாளனாக விளங்குகின்றார். அவனருளாலே அவன் தாள் வழங்கி அவனருள் பெற்றுய்வோமாக.

ஆக்கம் :

(88080) *செல்வி கோகுலதர்சினி - மகேஸ்வரலிங்கம்.*

---

# துயர் பகிர்கின்றோம்

*வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்,*

**திரு. வீ. இராசையா**

*அவரது பாசமிகு அன்னையார்*

## திருமதி மீனாட்சி வீரகத்தி

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுகிறோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
(C/16797) உடுவில் மகளிர் கல்லூரி.

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர் **திரு.சு.வேலாயுதபிள்ளை** அவர்களின் அன்புச் சகோதரியின் கணவரும், உடுவில் கமநல கேந்திர நிலைய இலிகிதர் **செல்வி சு.கலைச்செல்வியின்** பெரிய தந்தையாருமாகிய

## செல்லப்பா சண்முகம்பிள்ளை

அவர்கள் 18-05-2001 இல் இயற்கை எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
*கமநல அபிவிருத்தித் திணைக்களம்,*
*யாழ்.மாவட்டம்.* (88074)

---

## கிளிநொச்சி செயலக நடமாடும் சேவை இன்று

பளைப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கான கிளிநொச்சி மாவட்ட செயலக நடமாடும் சேவை இன்று காலை 9 மணி தொடக்கம் ஆனைக்கோட்டையிலுள்ள தம்பகாமம் கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறும் என பளைப் பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

நடமாடும் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இ.ஐயாத்துரை. வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு திணைக்களச் செயலாளர் எஸ்.சுபிர்தலிங்கம் உட்பட மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், வடக்கு - கிழக்கு மாகாண திணைக்கள அதிகாரிகள், பளைப் பிரதேசத்தில் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களைச் சந்திக்கவுள்ளனர். (உ-117)

## பல்கலையில் நூல் வெளியீடு

யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் எழுதிய "யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பல்கலைக்கழக நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலசந்திரன், உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர்.

நூல் அறிமுக உரையை புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் -

நூல் வெளியீட்டுரையை துணைவேந்தர் பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளையும் வழங்குவார்கள்.

பேராசிரியர் கா.குகபாலன் நூலாய்வுரை நிகழ்த்துவார். (ஐ)


**விற்பனைக்கு உண்டு**

போட்டோஸ்ரட் மிஷினுக்கு உரிய பொருள்கள்

1. ரோணர் பவுடர்
2. றம்
3. பிளேட்
4. I.C கவர் NO 65 MM.95MM. 250MIC
5. A4 சைஸ்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:-

ராஜ்வரன்,
*325, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (88071)

**நாகம்ஸ்**
சுன்னாகம்

எம்.ஜி.ஆர். (இருவேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார்
நடித்த

**எங்க வீட்டுப் பிள்ளை**

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 6.00 (விசேட காட்சி) (88073)

**ராஜா** யாழ்ப்பாணம்

சரத்குமார், தேவயானி
மற்றும் பலர் நடிப்பில்

**பாட்டாளி**

25.05.2001 முதல்
**உன்னைக்கொடு என்னைத் தருவேன்**
காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறு :10.30, 2.00, 5.00 (புதியநேரம்) (C/16664)

**லஷ்சுமி**
இணுவில்

*கார்த்திக், லைலா,*
*மனோரமா, தாமு*
*நடிப்பில்*

**ரோஜாவனம்**

(ரீல்ஸ்) *தினசரி 3 காட்சிகள்*
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)
27 ஆம் திகதி மட்டும் (88055)


---

# செங்கலடியில் குண்டு மீட்பு!

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் செங்கலடியில் நேற்று நண்பகல் மிதிவெடியுடன் இணைக்கப்பட்டிருந்த குண்டொன்றைப் படையினர் மீட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ள இந்தக் குண்டு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் -

வீதி ரோந்தில் ஈடுபடும் படையினரை இலக்கு வைத்து இந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் -

படைத்தரப்பு மேலும் தெரிவித்தது.

மீட்கப்பட்ட குண்டு பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது. (உ-3-4)

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து செல்லத்துரை

சண்டிலிப்பாய், ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து செல்லத்துரை (முன்னாள் சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள், சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிகர புத்திர தேவஸ்தான தர்மகர்த்தாவும், மலேயன் பென்ஷனியர், Retired chief Permanent Way Inspector, Malayan Railway) அவர்கள் நேற்றுமுன்தினம் (20.05.2001) ஞாயிற்றுக் கிழமை தமது 101ஆவது வயதில் கொழும்பில் இறைவன் திருவடி யெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து தங்கம்மாவின் மூத்த அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம், கந்தசாமி, திருமதி க.பொன்னம்மா ஆகியோரின் அன்பு அண்ணரும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், இராசமணி, சிவஞானம், திருஞானம், ஞானமணி, சிவமணி (கனடா), காலஞ்சென்ற ஞானகுருபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசா, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் ராஜலட்சுமி, பத்மராணி, ஜெகதாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், ரவிச் சந்திரன், அனுசா (லண்டன்), சந்திரகுமார், விக்னேந்திரன் (சுவிஸ்), சந்திரகாந்தன் (நோர்வே), சுகந்தி, வாசுகி, சந்திரபவான், கேமளா (பிரான்ஸ்), மதனி, சிறிமதி (கொழும்பு), பாலேந்திரன், தயாமதி, பாமதி (கனடா), சுமதி, பிரதாபன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனும், சுவாஸ்திகா, ஸகிஷ்ணா, நிலாந்தி, சாம்பவி, சிறீவிந் (சுவிஸ்), மதுசா, மதுசன், ஆதித்தன், பார்த்திபன், றுமேஸ் (கொழும்பு), ரமேஸ், கனுஜா, நிலானி (கனடா), ஆதவி, ஆதித்தன் (அமெரிக்கா), துவாஸ்கர், வஜீரா (சுவிஸ்), கோகுலன், கௌசிகா, அஸ்சிகா, விதுஷா, நிருஷா, உமா சங்கர், கிருஷாந் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2001) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
No.32, Kinrose Avenue, சிவஞானம், திருஞானம
Colombo -4. (பிள்ளைகள்)
T.P. 555204 (88060) *ஐயனார் வீதி,சண்டிலிப்பாய்.*

## கதிரேசு தம்பையா

(பருத்திக் கலட்டி, சுன்னாகம்)

சுன்னாகம் பருத்திக்கலட்டியில் வசித்தவரும் தற்காலிகமாக சென்னையில் வசித்தவருமாகிய கதிரேசு தம்பையா அவர்கள் 16.05.200 புதன்கிழமையன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - தையல்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் வடிவேலு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், மீனாம்பாளின் அன்புக் கணவரும், ரேணுகா(பிரான்ஸ்), கிருபா(நோர்வே) பிரபா(பிரான்ஸ்), சுதா(பிரான்ஸ்), பிரேமிலா(பிரான்ஸ்), பிரதீபன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கதிர்காமலிங்கம், விசயன்(பிரான்ஸ்), செல்வவேல்(பிரான்ஸ்), கலைவாணி(நோர்வே), விஜி(பிரான்ஸ்), தர்சினி(இந்தியா) ஆகியோரின் மாமனாரும் சரவணமுத்து நாகரத்தினம், செல்லம்மா, நாகேஸ்வரி(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லத்துரை(இலங்கை), பரமேஸ்வரி(இந்தியா), தெய்வேந்திரம் (பிரான்ஸ்), பாலேஸ்வரி(கொழும்பு), பரமானந்தராசா(நோர்வே), சிவானந்தராசா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் பிரதிகா(பிரான்ஸ்) தர்சன்(பிரான்ஸ்), கார்த்திகா(பிரான்ஸ்), செர்மிலா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2001) செவ்வாய்க் கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

| | | |
|---|---|---|
| *த.மீனாம்பாள்* | மீனாம்பாள் (மனைவி) | |
| *நியூ பெத்தனிய நகர்,* | மக்கள் | மருமக்கள் |
| *மெயின் றோட்,* | ரேணுகா | கலைவாணி |
| *வளசரவாக்கம்,* | கிருபா | விசயன் |
| *சென்னை - 87* | பிரபா | செல்வவேல் |
| *T.P. 4866635* | சுதா | விஜி |
| (88060) | பிரேமிலா | தர்சினி |
| | பிரதீபன் | |

## திருமதி கந்தையா இளையபிள்ளை

இணுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா இளையபிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் (20.05.2001) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற காலிங்கர் கந்தையாவின் அருமை மனைவியும், துரைசிங்கம், நாகராசா (பிரான்ஸ்), சறோஜினிதேவி, தெய்வேந்திரம், பத்மினி (கொழும்பு), கமலாதேவி (சுவிஸ்), மல்லிகாதேவி ஆகியோரின் அருமைத்தாயாரும் சுப்பிரமணியம், பராசக்தி, கமலாஜனி (பிரான்ஸ்), கனகலிங்கம் (கொழும்பு), சுந்தரலிங்கம் (சுவிஸ்), யோகராணி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், செல்லம்மா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் தயாபரன் (சுவிஸ்), அருந்ததி (சுவிஸ்), குருபரன் (ஜேர்மன்) காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் செந்தில் (கனடா) பபியன் (பிரான்ஸ்), அமுதவாணி, நல்லைக்குமரன், செல்வக்குமரன், மதிவதனன், சுமதி (சுவிஸ்), தெய்வக்குமார், செல்வக்குமார், தர்சினி, தாரணி, தமயந்தி, கலைவாணி, கல்யாணி, புருசோத்தமன், பார்த்தீபன் (பிரான்ஸ்), பரந்தாமன், மயூறன் (கொழும்பு), எழில்ராஜ், பாலகிரீஷன், வைஷ்ணவன், வைஷ்ணவி, கோபி ஆகியோரின் பேர்த்தியும் செந்தூரன், கார்த்திகா, கஜனி, கஸ்தூரி, கார்த்தீபன், தர்சன் (சுவிஸ்), திருசன், தீவீனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (20.05.2001) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இணுவில் கிழக்கு,* துரைசிங்கம்
*வங்கியடி.* (88068) தெய்வேந்திரம்
(பிள்ளைகள்)

# பிரதமரின் கீழான ஆட்சிமுறை 2004ஆம் ஆண்டில் அமுலுக்கு!

## அமைச்சர் சமரவீர கூறுகின்றார்

கொழும்பு,மே22

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, சகல அதிகாரம் கொண்ட பிரதமரின் கீழான ஆட்சிமுறையை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

மாத்தறையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு 2004ஆம் ஆண்டில் தனது 5வருட ஆட்சியின் நிறைவைக் கொண்டாட உள்ளது. அந்தச்சமயத்தில் அரசமைப்புச்சட்டம் திருத்தியமைக்கப்படும்.

அடுத்த பொதுத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் பதவிக்காகவே போட்டியிடுவார் - என்றார் அவர். (உ-ஒ-4)

# தாயை வல்லுறவுக்குட்படுத்தியவரை பழிவாங்க தப்பி ஓடிய சிப்பாய்

"எனது தாயைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியவர்களைப் பழிவாங்குவதற்காகவே நான் இராணுவத்தில் இருந்து ஆறு நண்பர்களுடன் தப்பி ஓடினேன்"

இவ்வாறு கொலைக்குற்றச்சாட்டின் பேரில் கைதாகிய இராணுவச் சிப்பாய் ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 20 பேரைக் கொலை செய்ததாக இராணுவத்தில் இருந்து தப்பி வந்த அந்த நபர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தான் இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் தனது தாயாரை தென்மாகாண சபை அமைச்சர் ஒருவரின் ஊழியர்கள் கற்பழித்து, சித்திரவதை செய்ததாகவும்-பொலீஸில் முறையிட்டபோதும், குற்றவாளிகளுக்கு சாதகமாகவே பொலீஸார் செயற்பட்டதாகவும் - அதனால் தாயைக் கற்பழித்தவர்களைப் பழிவாங்கவே இராணுவத்திலிருந்து வெளியேறியதாகவும் அந்த நபர் மாத்தறைப் பொலீஸில் வாக்குமூலம் அளித்துள்ளார். இவர் தெஹிவளையில் லட்சாதிபதி ஒருவரின் மகனைக் கடத்திச் சென்று 50 லட்சம் ரூபா பணயத்தொகை கேட்டு மிரட்டிய போது பொலீஸாரிடம் சிக்கியது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

கந்தர்மடம் பழம் வீதி,
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ ப.சோமஸ்கந்தக் குருக்களின்**
மருமகன்
**வைத்திய கலாநிதி**
**சேஷாமணி ஐயர்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தங்க. முகுந்தன்,
(C/16804) யாழ்.மாநகர சபை உறுப்பினர்.

BIT ☞ IIS

நீங்கள்,



கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பட்டதாரியாக விரும்புகிறீர்களா?

அதை ஒரு நவீன கணனித் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உத்தரவாதம் உள்ள நிறுவனத்தில் கல்வி பயில விரும்புகிறீர்களா?

ஆம் எனில்,

உடனடியாக எமது தலைமை அலுவலகத்திலோ அல்லது கிளை நிறுவனங்களுடனோ தொடர்பு கொண்டு விண்ணப்பியுங்கள்

எமது இறுதிக் கட்டப் பதிவுகள் எதிர்வரும் 31ம் திகதி கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெற இருப்பதால்

30.05.2001 பிற்பகல் 4 மணிக்கு

முன் விண்ணப்பப்படிவங்கள் எமது அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

தெரிவுப் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புக்கள்
ஆரம்பம் 19. 05. 2001 - 3.00 pm

**Institute of Informatics Studies**
(Affiliated to Irish International University, Dublin.)

## செப்ரிசீமியா இளைஞன் உயிரிழப்பு

செப்ரிசீமியாவின் தாக்கத்துக்கு உள்ளாகி யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சங்கானை நீதிவான் பங்களா முகாமைச் சேர்ந்த பாலசிங்கம் கணேஸ் (வயது 30) என்பவரே மரணமானவர் ஆவார். (3-15)

## சேக்கிழார் குருபூசை

வலிகாமம் தெற்கு,மே22

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சேக்கிழார் சுவாமிகளின் குருபூசையும் நினைவு தினமும் கொண்டாடப்படவுள்ளது.

இந்தப் பாடசாலையின் இந்துமாமன்றத்தினர் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

அதிபர் அ.நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இளைப்பாறிய அதிபர் கா.கணேசதாஸன் கலந்துகொண்டு தெய்வச் சேக்கிழார் பற்றி சிறப்புரையாற்றுவார். (க-152)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாந்தி குருகுலசூரிய, சந்திரகாந்தி ஆகிய இரு பெண் ஊழியர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகியதாகவும் -

இவர்கள் மூவரும் திருகோணமலை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடிப்பினால் அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் 'கஜபா' படைப்பிரிவு நிலைகொண்டுள்ள பிரடெரிக் கோட்டை அதியுயர் பாதுகாப்பு வலயமாகும். (உ-ஒ-3-4)

## நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடித்துக் கொண்டு சொல்ஹெய்ம் பிரிட்டனுக்கு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசு தனது நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடை விதித்ததைத் தொடர்ந்து பிற நாடுகளிலும் அந்த அமைப்புக்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்ததும் -

இலங்கையின் வற்புறுத்தலின் பின்னணியில் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் அந்தந்த நாட்டு அரசு புலிகள் இயக்கத்துக்குத் தடை விதித்ததும் -

இலங்கை அரசு தம்மீதான தடையை நீக்காத வகையில் அந்த அரசுடன் சமாதானத் தீர்வுக்கான அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தாங்கள் தயாரில்லை என்று புலிகள் அறிவித்ததும் -

இந்தப் பின்னணியில்தான் சொல்ஹெய்ம் அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு விஜயம் செய்கின்றார் என்பதும் -

குறிப்பிடத்தக்கவையாகும்.

## மேலும்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறது.

அத்தியடிப் பகுதியிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டின் மீது தொடர்ந்து சில தினங்களாக கற்கள் வீசப்பட்டதாகவும் -

இந்தப் பகுதியில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பெரும் களேபரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுவதும் - தெரிந்ததே. (உ-10-9)

# மாவனல்ல சேத விவர அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு

கொழும்பு,மே22

மாவனல்லையில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பான சேத விவரங்களை சேகரித்து வந்த கேகாலை அரசாங்க அதிபர் ஏ.ரி.சூரியரத்ன தலைமையிலான குழு அது தொடர்பான அறிக்கையை ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 94 பேர் தமக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த விண்ணப்பங்களை இன்னமும அனுப்பி வைக்காததால் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க முடியாதிருந்ததாக கேகாலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

மாவனல்ல வன்செயல்களில் 294 கட்டடங்கள் சேதமடைந்துள்ள போதும் இதுவரை 200 விண்ணப்பங்கள் மட்டுமே தமக்கு கிடைத்துள்ளதாகவும்-

கட்டடங்களுக்கு மட்டும் ஏற்பட்ட நஷ்டம் எட்டரைக்கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (3-4)

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் தேடுதல் மேற்கொண்டனர் தேடுதலில் ஏ.கே.47 ரக மகசீன் ஒன்றை கண்டெடுத்தனர் என்றும் -

விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்புகளை இடைமறித்துக் கேட்டதில் பெண் போராளி ஒருவர் காயமடைந்தது தெரியவந்தது என்றும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (உ-ஒ)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வந்த பின்னரே சேவை இடைநிறுத்தப்பட்ட விடயம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

சேவையில் ஈடுபடும் விமானங்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவே இந்தச் சேவை இரு தினங்கள் இடைநிறுத்தப்பட்டதாகவும் -

நாளை முதல் வழமைபோல் சேவைகள் இடம்பெறும் என்றும் -

'ஹெலிரூர்ஸ்' யாழ்.அலுவலகம் தற்போது தெரிவித்துள்ளது.(உ-3)

## பாதீனியத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் 'எலியோற்றிஸ்' தாவரங்களைப் பேணி வளர்த்து மனித உதவி மூலம் அதனைப் பரம்பல் செய்து பாதீனியத்தால் உருவாகிவரும் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும் என்று இது தொடர்பாகவும் தாவர இனங்களின் பல்லினத் தன்மைகள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொண்டு வருபவரான தாவரவியல் நிபுணர் கே.எஸ்.குகதாஸன் தெரிவித்திருக்கிறார்.

பாதினியத்துக்குச் சவாலாக அதனை ஆக்கிரமித்து அழிக்கும் தன்மை கொண்ட தாவர இனங்கள் தொடர்பாக அவர் வரைந்த சிறப்புக் கட்டுரை இன்றைய 'உதயனி'ன் நடுப் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

FOR PROSPECTIVE ENGINEERING STUDENTS

SPECIAL ENGINEERING DRAWING CLASSES WITH AutoCAD

Institute of Informatics Studies
100,Clock Tower Road, Jaffna.
T.P.No: 2831 EMail: iis@sltnet.lk
(C/16798)

## மரண அறிவித்தல்

**கந்தையா பொன்னம்பலம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கரணவாய் தெற்கைச் சேர்ந்த கந்தையா பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்றிரவு காலமானார்.

அன்னார் மாசிலாமணியின் அன்புக் கணவரும் டாக்டர் பொ.இராமநாதன் (உதவிப்பணிப்பாளர் - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்), திருமதி நாகராஜேஸ்வரி சண்முகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செ.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஓவசியர்) அவர்களின் மைத்துனரும், கலாநிதி ஆர்.ரி.சண்முகநாதன் (லண்டன்), திருமதி ம.தர்மகுலசிங்கம், திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் (பேராசிரியை, யாழ்.பல்கலைக்கழகம்), ம.பொன்னம்பலம் ஆகியோரின் மாமனாரும், இ.ராகவன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), இ.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), ச.அனுஜா (லண்டன்), ச.நிட்சகன் (லண்டன்), ச.நிரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 'பொன் இல்லம்' சோழங்கன் கரணவாய் தெற்கு, கரவெட்டி என்ற முகவரியில் இடம்பெற்று பூதவுடல் பூவற்கம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பொன் இல்லம்',*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (C/16805)

தகவல்:
டாக்டர் பொ.இராமநாதன்

**MICRO - WIN Computer**

# 337, Kasthuriar Road, Jaffna. Tel: 021 - 2827, 3497


**Computer Hardware** பயிற்சியினை மிக வெற்றிகரமாக நடத்திவரும் எமது நிறுவனம் பல மாணவர்களின் வேண்டுதலுக்கிணங்க

**மிகக் குறைந்த கட்டணத்தில்**

இப்பயிற்சிநெறி உட்பட இதுவரை இங்கு அறிமுகப்படுத்தப்படாத பல புதிய பயிற்சிநெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளவும்.





(C/16788)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.